


# மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

## ஆற்றிய உரைகள்

17,18 மற்றும் 19 டிசம்பர் 2012

# மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகள்

17, 18 & 19 டிசம்பர் 2012

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி – மக்கள் தொடர்புத்துறை,

சென்னை

சிறப்பு வெளியீடு எண். 18

தமிழரசு இலவச வெளியீடு

டிசம்பர் 2012

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
110, அண்ணா சாலை,
சென்னை — 600 002.

# பொருளடக்கம்

1. சென்னை, தலைமைச் செயலகத்தில்
**17.12.2012** அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம் .................................. 5

2. சென்னை, தலைமைச் செயலகத்தில்
**18.12.2012** அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம் ................................ 25

3. சென்னை, தலைமைச் செயலகத்தில்
**19.12.2012** அன்று நடைபெற்ற
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம் ................................ 27

4. சென்னை, தலைமைச் செயலகத்தில்
**19.12.2012** அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சியர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய நிறைவுரையின் தமிழாக்கம் ........................................ 31

சென்னை, தலைமைச் செயலகத்தில்
**17.12.2012** அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம்

---

மாண்புமிகு அமைச்சர்களே,
தலைமைச் செயலாளர் அவர்களே,
காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே,
உள்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே,
அரசுச் செயலாளர்களே,
துறைத் தலைவர்களே,
முதுநிலை காவல்துறை அதிகாரிகளே,
காவல்துறை ஆணையர்களே,
மாவட்ட ஆட்சியர்களே மற்றும்
காவல்துறைக் கண்காணிப்பாளர்களே,

இன்று, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் இரண்டாவது மாநாட்டில் உங்கள் அனைவரிடமும் கலந்துரையாடுவதில் நான் பேருவகை அடைகிறேன். கடந்த ஆண்டு முதலாவது மாநாட்டில் நான் தெரிவித்த கருத்துக்களை நினைவுகூர விழைகிறேன். அப்போது, நான், இந்த அரசு, மக்களின் விருப்பங்களை உணர்ந்து கொள்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு

உறுதியான உத்திகளை மேற்கொள்ளும் என்று நான் குறிப்பாக வலியுறுத்தியிருந்தேன். இந்த மாநாட்டின்போது, அந்த வகையில் நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோமா என்பதைக் கண்டறிந்து, அவசியம் ஏற்பட்டால், பல்வேறு திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கான உத்திகளை முடுக்கிவிட்டு, அதன் மூலம் இலக்கிடப்பட்ட மக்கள் தொகுதியினர், உரிய காலத்தில் பயன்களைப் பெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

**2.** இந்த அரசு, தூய்மையான, வெளிப்படையான, செம்மையான மற்றும் பொறுப்புமிக்க நிருவாகத்தை அளிப்பதற்கு முற்றிலும் பொறுப்பேற்றுள்ளது என்பதை நான் வலியுறுத்த விழைகிறேன். இந்த மாநில மக்கள், திட்டவட்டமாக நிருவாகப் பொறுப்பை நமக்கு அளித்ததன் மூலம், இந்த அரசிடம் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். எனவே, ஏழை எளிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், மதிக்கத்தக்க, சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் அளிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது.

**3.** நியாயமும், நேர்மையும் உள்ள சமுதாயம் விரைவில் வளம் காணும் என்பது அனைவரும் நன்கு அறிந்த ஒன்றாகும். அத்தகைய சமுதாயம், பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் இருப்பதுடன், உண்மையான மகிழ்ச்சியுடன் நிலவும். நான் தமிழ்நாட்டிற்காக, தொலைநோக்குத் திட்டம்

ஒன்றைத் தயாரித்தளித்துள்ளேன். அதில், பெரிய அளவில் முன்னேற்றமும், சமூக நீதியுடன் பகிர்ந்தளிக்கத்தக்க வளவாய்ப்புகளும் அடங்கியுள்ளன. அந்தத் தொலைநோக்கத்தை, நிறைவேற்றி முடிப்பதற்கு நான், இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் நம்பியிருக்கிறேன். இதை, எடுத்துக்காட்டாக விளங்கும் நிருவாகத்தால் மட்டுமே சாதிக்க இயலும்.

4. நல்ல நிர்வாகம் மட்டும் அல்ல, எடுத்துக்காட்டாக விளங்கும் நிருவாகத்தைத்தான் நமது இலக்காக அமைத்துள்ளோம். நான், முன் நின்று மாநில நிருவாகத்தை வழிநடத்தி வந்துள்ளேன். இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் வறுமையை ஒழித்தல், விரிவான முறையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல், பொருளாதார வளர்ச்சிக்கான உள் கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல், மக்களின் உடல்நலனை மேம்படுத்துதல், கல்வி, வேலைவாய்ப்புகள் ஆகியவற்றுக்கான வசதியுடன் மதிப்பு வாய்ந்த வாழ்க்கையை மக்கள் நடத்த உதவுதல், அமைதியும், ஸ்திரத்தன்மையும் உடைய சூழலில் வளர்ச்சி காணுதல் ஆகியவை கொள்கையை அறிவிக்கும் என்னுடைய உறுதிமொழிகளாக இருந்து வந்துள்ளன. பொது அமைதி, அரசியல் ஸ்திரத்தன்மை, பராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்கான திட்டம் ஆகியவை அத்தகைய நிருவாகத்திற்கான முன் தேவையாகும். இந்த முன் தேவைகள் தொடர்பாக, கடந்த

19 மாதங்களில் நாம் பெருமளவில் முன்னேற்றம் அடைந்துள்ளோம். ஆனால், எப்போதும், மென்மேலும் முன்னேற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. சீரான, எடுத்துக்காட்டாக விளங்கும் நிருவாகத்திற்கு வெறும் முன்னேற்றம் மட்டுமின்றி ஒவ்வொரு நிலையிலும் முழுமை அவசியமாகும்.

**5.** நமது மாநிலத்தில், சட்டம் மற்றும் ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டுள்ளது. பொதுவான ஸ்திரத்தன்மைக்கும், அமைதிக்கும் அச்சுறுத்தலாக அமைகிற பெரிய பிரச்சினைகள் எவையுமில்லை. இடதுசாரித் தீவிரவாதம், தமிழ்நாட்டில் இல்லை. மதவாதம், அதனுடைய கோர உருவத்தில் தலையெடுக்க அனுமதிக்கப்படவில்லை. இனப்பதட்டத்தை விளைவிக்கக்கூடிய சம்பவங்கள், மிக விரைவாகக் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. குறைதீர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், மனநிறைவளிக்கிற அமைதியான சூழல் எங்கும் நிலவுகிறது. பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களுக்கும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்குமிடையே நிலவுகிற செம்மையான ஒருங்கிணைப்பினால் இவையனைத்தும் சாத்தியமாகியுள்ளன.

**6.** கடந்த காலத்தில் அவிழ்த்துவிடப்பட்ட பல பரபரப்பான, கடுமையான குற்றங்கள் கடந்த 19 மாதங்களில் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றன. நில அபகரிப்பு வழக்குகளில் தொடர்

நடவடிக்கை மேற்கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய சொத்தினைத் திரும்பப் பெறுவது உறுதி செய்யப்படுகிறது. இதுவரையில் 1,627 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ. 835.94 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் உண்மையான உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதே முறையில் சட்ட விரோதமாக வெட்டியெடுக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்ட ரூ. 4,000 கோடி மதிப்புள்ள கிரானைட் கற்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், வெட்டியெடுக்கப்பட்ட கிரானைட் கற்கள், சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுகிற நேர்வுகளில், சொத்துக்களை ஜப்தி செய்வதற்கும், (சுமார் ரூ. 9,783 கோடி மதிப்புள்ளவை) குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவையனைத்தும் ஒரு சில எடுத்துக்காட்டுகளேயாகும். மேலும், காவல் துறையினர் மேற்கொண்ட அக்கறை, சுறுசுறுப்பு மற்றும் கடமைப் பற்றுறுதிமிக்க நடவடிக்கைகளின் காரணமாகக் கடுமையான தன்மை கொண்ட பல குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காவல் துறையின் தங்குதடையற்ற, எவ்விதக் குறுக்கீடும் இல்லாத நிருவாகமே இதற்குக் காரணமாகும். இதன் மூலம், தமிழ்நாடு, இந்த வகையில் நாட்டிலேயே பெருமை பெறும் வகையில் அணி செய்கிறது.

7. இந்தச் சூழ்நிலையில், குற்ற நிகழ்வுகளைக் குறைப்பதற்காக, சட்டத்தின் தடுப்புப் பிரிவுகளின் உதவியை

நாட வேண்டிய அவசியத்தை, வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், இதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் மிகவும் பயனுள்ள முறையில், குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின் தொடர்புடைய பிரிவுகளைப் பயன்படுத்த வேண்டும். இது, சட்டத்தை மதித்து நடக்கிற குடிமக்களின் உள்ளத்தில் நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு உணர்வையும், குற்றம் புரிவோரின் உள்ளத்தில் அச்சத்தையும் ஏற்படுத்தும்.

8. சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய சில வெளிப்புற அச்சுறுத்தல்கள் குறித்து உங்களுடைய கவனத்தை, நான் ஈர்க்க விழைகிறேன். என்னுடைய அரசு, மத்திய அரசிடம் தொடர்ந்தும், ஆற்றல் வாய்ந்த முறையிலும், எதிர்ப்பைத் தெரிவித்ததன் விளைவாக, இலங்கைக் கடற்படையினர் நமது மீனவர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவது கட்டுக்குள் வந்தபோதிலும், தொடர்ந்து அவர்கள் தாக்குதல்கள் நிகழ்த்தி வருகின்றனர். இருப்பினும், கடந்த காலங்களில் பல மீனவர்களின் விலை மதிப்பில்லா உயிர்கள் பறிபோனது போலன்றி, இந்தப் பிரச்சினையால், 2012 ஆம் ஆண்டில் ஒரு மீனவர் கூட இறக்கவில்லை என்பது பெரிதும் மனநிறைவை அளிக்கிறது. நமது எல்லையைச் சேர்ந்த கடற்பரப்பின் மீது தொடர்ந்து இதே அளவுக்குக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு செலுத்த வேண்டும். அதனால், நமது மீனவர்களின் உரிமைகள் இன்னலுக்கு உள்ளாகாது.

**9.** பொது விநியோகத் திட்டத்தின் கீழ், மக்களுக்கு விலையில்லா அரிசி வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். எனவே, பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசியை கடத்துவதற்குத் தூண்டுதல் ஏற்படுகிறது. அரசு, குடிமக்களுக்கு விலையில்லா அரிசி வழங்குவதற்காக, ஏறத்தாழ ரூ.3,300 கோடி செலவிடுகிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஆகவே, மாநில எல்லைகளைத் தாண்டி சட்டத்திற்குப் புறம்பான வகையில் அரிசியைக் கொண்டு செல்வதை முறியடிக்கும் மாபெரும் பொறுப்பு, மாவட்ட நிருவாகத்திற்கு உள்ளது.

**10.** ஏனைய மாநிலங்களின் அண்டைப் பகுதியிலிருந்து, மாநிலத்திற்குள் போலி மதுபானங்களின் வரத்தினை, முனைப்புடன் முற்றிலுமாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அப்போதுதான், கள்ளச்சாராயத் துயரங்களைத் தடுத்து, மதுபான விற்பனை மீதான ஆயத்தீர்வை வரி ஏய்ப்பினைத் தடுத்து நிறுத்துவதென்ற நமது மதுவிலக்கு அமலாக்கக் கொள்கை விரும்பிய இலக்குகளை எய்தும்.

**11.** சாலைப் பாதுகாப்பு மேம்பாடு குறித்தும் விபத்துகள் காரணமாக உயிர்கள் பலியாவதைத் தடுப்பது குறித்தும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். வசதிகள் பெருகுவதாலும் நல்ல சாலைகளின் காரணமாகவும், அதிகளவில் மக்கள் பயணம் செய்கிறார்கள். அவ்வாறு பயணம் செய்பவர்கள் விரைவான பயணம் மேற்கொள்வதற்கும் வகை செய்யப்படுகிறது. இதனால்

போக்குவரத்து அதிகரிப்பதுடன், சிலர் வாகனங்களை கூடுதல் வேகத்தில் இயக்கக் கூடும். நான், 80 வண்டிகளுக்கும், தேவையான பணியாளர் எண்ணிக்கைக்கும் அனுமதித்ததன் வாயிலாக மாநிலத்தில் நெடுஞ்சாலை ரோந்துக் கோட்பாட்டினை 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினேன். அவசர விபத்து நிவாரண மையங்களும் 2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கு, சாலைப் பாதுகாப்பு வழிமுறைகளை முறையாகப் பின்பற்றி, தீவிர நெடுஞ்சாலை ரோந்தினை நடைமுறைப்படுத்தி இந்த மையங்களுக்கு புத்துயிர் அளிப்பது அவசியமாகிறது.

12. நிருவாகத்தின் பல்வேறு துறைகளின் முக்கியப் பிரச்சினை குறித்து இதே நிகழ்ச்சி நிரலில் விரிவாக அலசப்பட்ட நிலையில், எஞ்சியவற்றை உங்களுடைய விரிவான விவாதங்களுக்கு விட்டுவிட்டு, அவற்றில் சிலவற்றை எடுத்துரைக்க விரும்புகிறேன். உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்தவாறாக, இந்த ஆண்டு மார்ச்சு மாதத்தில் “தொலைநோக்குத் திட்டம்–தமிழ்நாடு 2023” ஆவணத்தை நான் வெளியிட்டுள்ளேன். இந்த ஆவணமானது, தொழிலக வட்டத்தில் நன்கு வரவேற்புப் பெற்றுள்ளதையும், உள்நாடு மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்களிடம் ஏராளமான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதையும் நான் அறிகிறேன். இந்த தொலைநோக்குத் திட்டத்தில், வேளாண்மை, மீனளம் மற்றும்

கால்நடைப் பராமரிப்பு போன்ற முதன்மைத் துறைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அரசு, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி வீத இலக்கினை 11 சதவீதத்திற்கு உயர்த்துகின்ற அளப்பரிய ஆனால் செய்யக்கூடிய வரையறையைத் தனக்குத்தானே வகுத்துள்ளது. இதற்காக, முதன்மைத் துறைகள் ஆண்டுக்கு 5.1% வளர்ச்சி காண வேண்டியுள்ளது. இந்த நோக்கத்தை மனதில் கொண்டு தான், உழவர்கள் கணிசமாக வருவாய் ஈட்டும் பொருட்டு, உணவு தானியங்களை இருப்பில் வைப்பதற்கான தொடர் சேமிப்புக் கிடங்குகள் உருவாக்குவது உட்பட வேளாண்மை, அண்மைக்காலப் பண்ணைத் தொழில் தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரமயமாக்கலில் அரசு, பெருமளவில் முதலீடுகளைச் செய்துள்ளது. எந்தத் தவறுக்கும் இடம் கொடுக்காமல் இந்தத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். அதே போன்று, பெண்கள் குடும்பத் தலைவியாக இருக்கின்ற ஊரக ஏழைக் குடும்பங்களுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் அரசின் முதன்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஊரக மகளிருக்கு சமுதாய ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அதிகாரமளிப்பதை இத்திட்டங்கள், நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. கறவை மாடுகள் வழங்கியதாலும், புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியதாலும், மாநிலத்தில் பால் உற்பத்தி

மெச்சத்தக்க வகையில் அதிகரித்திருப்பதை நான் அறிகிறேன். அரசு, இந்த ஆண்டில் ஏற்கெனவே, புதிய தமிழ்நாடு மீனளப் பல்கலைக்கழகத்தையும், மீனளத் தொழில்நுட்ப நிறுவனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த முயற்சிகள் அனைத்தும் இரண்டாவது பசுமை புரட்சிக்கும், வெண்மைப் புரட்சிக்கும் வித்திடும் என்பதால், மாவட்ட ஆட்சியர்கள், முக்கியப் பங்காற்ற வேண்டியுள்ளது. முதன்மைத் துறையிலுள்ள முக்கியத் திட்டமானது, நவீன வேளாண் செயல்பாடுகள், ஆரோக்கியமான மற்றும் இனப்பெருக்க கால்நடைகள் மற்றும் நீடித்த மீன் வளர்ப்பு உள்ளடக்கிய கலப்புப் பண்ணைத் தொழில் திட்டமாகும். இவையனைத்தும் ஒன்று சேருமானால், ஊரகக் குடும்பங்களின் வருமானம் நீடித்த அளவுக்கு உயரும்.

**13.** அத்தியாவசியப் பொருட்களின் விலைஉயர்வு குறித்த பிரச்சினை மிகுந்த கவலையளிக்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு உணவுப் பாதுகாப்பிற்கு வகை செய்வதற்காக, தமிழ்நாடு அரசானது, நாடு முழுவதற்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ், விலையில்லா அரிசி வழங்கல் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்துடன், பருப்பு, எண்ணெய் போன்ற ஏனைய பொருட்களும் மானிய விலையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. இந்த அரசு, அத்தியாவசியப் பொருட்களின் விலையை நிலைப்படுத்துவதற்கு விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, கடந்தாண்டில்

ரூ.50 கோடி மதிப்பிலான விலை நிலைப்படுத்துதல் நிதி ஒன்றை உருவாக்குகின்ற புதுமையான நடவடிக்கையை மேற்கொண்டது. இவையனைத்தும் அரசின் மீது பெரும் சுமையை ஏற்றியுள்ளன. மாவட்ட ஆட்சியர்கள், இத்திட்டத்தின் உட்கருத்தை உணர்ந்து, கருதப்பட்ட பயனாளிகளுக்கு, பலன்கள் சென்றடையும் வகையில் அதன் செயல்பாட்டினை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துவது குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள், போலி அட்டைகள் களையப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும், தேசிய மக்கள் தொகைப் பதிவின் கீழ், விரல் ரேகைப் பதிவுடன் கூடிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி (Biometric enumeration of people) அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருவதை நான் அறிகிறேன். "ஆதார்" எண், அந்த தரவு தளத்தில் கடைசியில் சேர்க்கப்படும். இது முடிவடைந்தவுடன், பொது விநியோகத் திட்டத்தின் இறுதி முடிவு கணினி மயமாக்கலுக்காக, இந்தத் தரவினை நாம் பயன்படுத்திக் கொள்ள இயலும். இது போலி அட்டைகளை முற்றிலும் ஒழிப்பதற்கு நமக்கு உதவுவதுடன், ஸ்மார்ட் குடும்ப அட்டைகளை வழங்குவதற்கும் அரசுக்கு உதவும்.

**14.** கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என 2011ஆம் ஆண்டு 97ஆவது

அரசமைப்புத் திருத்தம் அதிகாரபூர்வமாக உத்தரவிட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அரசால் மேற்கொள்ளப்படும். மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்டங்களில், கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல்களின்போது சட்டம் ஒழுங்கு பேணப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். பதற்றம் நிறைந்த பகுதிகளின் பட்டியல், மாவட்ட நிருவாகத்திடம் ஏற்கெனவே உள்ளது.

**15.** ‘‘அனைவருக்கும் மருத்துவ வசதி’’ என்பதே மருத்துவத் துறையில் அரசினுடைய நோக்கமாகும். இந்த இலக்கினை நோக்கி, ரூ.4 இலட்சம் வரையிலான நிதியுதவியுடன், அதிகளவில் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதை உள்ளடக்கிய ‘‘மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்’’ சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைவராலும் பாராட்டப்படும் அதே நேரத்தில், ஒருவர் ஏழையாக இருக்கின்ற காரணத்தினால் அவருக்கு மருத்துவ சிகிச்சை மறுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு நல்லமுறையில் செயல்படுத்துவதற்காக மேலும் அதிக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. குழந்தை இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம் போன்ற மிகமுக்கியமான பிரச்சினைகளில் மாவட்ட ஆட்சியர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள், இப்பிரச்சினைகளைக்

கையாளுவதில் புதுமையான வழிமுறைகளைக் கையாண்டு தீர்வு காணவேண்டும். முதன்மையான அரசு மருத்துவமனைகளில் உள்ள நவீன, நுட்பத்திறன் வாய்ந்த நோய் அறுதியிடு மையங்களை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் ஏற்படுத்துவதற்காகவும், பல்வேறு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், அரசு தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒவ்வொருவருக்கும் 24 மணிநேரமும் உயர்ந்த தரத்தில் மருத்துவ வசதி வழங்குவதே இந்த அரசின் முக்கிய குறிக்கோளாகும். இதனைத் தெரிவிக்கின்ற இத்தருணத்தில், நம் மாநிலத்தில் சமீபத்தில் பாதிப்பை ஏற்படுத்திய டெங்கு காய்ச்சல் எளிதில் பரவக்கூடிய நோய்கள் மீது உங்களுடைய கவனத்தைக் கொண்டுவர விழைகிறேன். இந்த அவசர சூழ்நிலையைக் கையாளுவது தொடர்பான தெள்ளத் தெளிவான வழிகாட்டிக் குறிப்புகளை அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. இத்தகைய நோய்த் தடுப்பின் முழுப் பொறுப்பும் மாவட்ட நிருவாகத்தின் கைகளிலே உள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்துப் பொறுப்பாளர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய பிரச்சாரங்களை நடத்துவதுடன், உடனடியாக மருத்துவ சிகிச்சை வழங்குவதன் மூலம் இத்தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்குத் திறன்மிகு நடவடிக்கை எடுப்பீர்கள் என்றும் நான் நம்புகிறேன்.

**16.** 6 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள குழந்தைகள் எவரும் பள்ளிக்கூடத்தை விட்டு நின்று விடவில்லை என்ற நிலையை எய்துவதற்காக, கல்வி உரிமைச் சட்டத்தை அரசு செயல்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பள்ளிச் செல்லும் குழந்தைகள் இடையிலேயே பள்ளியைவிட்டு நிற்பதைத் தடுப்பதற்காக நிதி உதவித் திட்டம் உட்பட கல்வி உதவித் தொகை, பள்ளிப்படிப்பிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வழங்குதல், அதாவது பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பள்ளிக்கூடப் பைகள், சீருடைகள், ஜியமிட்ரி பாக்ஸ், வரைபடங்கள், மடிக்கணினிகள், காலணிகள் முதலியவை பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்குதல் போன்ற பல்வேறு புதுமையான திட்டங்களை அரசு ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது. இந்த அனைத்துத் திட்டங்களும், ‘‘அனைவருக்கும் கல்வி’’ என்ற இலக்கினை எட்டுவதுடன், நமது குழந்தைகளுக்குத் தரமான கல்வியையும் வழங்கும் என்றும் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து, துப்புரவு வசதிகள் கல்வியில் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதால் குறிப்பாகப் பெண்களுக்குப் பள்ளிகளில் துப்புரவு வசதிகளை வழங்க வேண்டும் என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன். மாவட்ட ஆட்சியர்கள் குறித்த காலத்திற்கொருமுறை ஆய்வு மேற்கொள்வதன் மூலம், உரிய குடிநீர் வசதியுடன் பள்ளிகளும், மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்களும், தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருவதை உறுதி செய்ய வேண்டும்.

17. தனியார் மயமாக்கப்பட்ட திட்டங்களில் தரத்தில் சமரசம் செய்யாது விரைவாக செயல்படுத்துவதை உறுதிசெய்வதிலும், தேவைகளை அடையாளங் கண்டறிவதிலும், ஊரக மற்றும் நகர்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் வழிகாட்ட வேண்டும். பெரும்பாலான நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் திடக்கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்களைத் தெரிவு செய்வதில் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றன. தூய்மையான, குப்பைகளற்ற மாநகரங்களையும், நகரங்களையும் உருவாக்குவதற்கு, பாதாளச் சாக்கடைத் திட்டம், திறன்மிகு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றை உருவாக்குவது அவசியமாகும். சிறந்த துப்புரவு வசதியை அளிக்கும் பொருட்டு, மாநிலத்தின் அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு வகைசெய்யப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன். எனது உத்தரவின் பேரில், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.21,777 கோடி மதிப்பிலான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், வண்டிகள், சாதனங்கள் வாங்குதல் ஆகியவை உட்பட இயக்கத் திட்டப் பணிகளின் கீழ், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக, நான் ரூ.273.96 கோடிக்கு ஒப்புதலளித்துள்ளேன். நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு வசதித் திட்டங்களின் முன்னேற்றங்களை மாவட்ட ஆட்சியர்கள் தவறாமல்

கண்காணிக்க வேண்டும். கிடைக்கக்கூடிய நிலம், ஏனைய களத்துறைகளின் ஒருங்கிணைப்பு, அனைத்து நிருவாக அதிகாரிகள்/பொறுப்பாளர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் உரிய நேரத்தில் பணிகளை நிறைவேற்றுவதற்கான வசதிகளையும் மாவட்ட ஆட்சியர்கள் செய்து தர வேண்டும். 'மொத்த துப்புரவு' இயக்கங்களைக் கொண்டு, குப்பைகளை நீக்குவதற்கென நீங்கள் தனிக்கவனம் செலுத்துவீர்கள் என நான் நம்புகிறேன். இதை ஒரு தொடர் நடவடிக்கையாகக் கொண்டு செயல்பட வேண்டும். இது நமது மாநகரங்களில், நகரங்களில் உடனே கண்ணில் படும் அம்சமாக இருக்க வேண்டும்.

**18.** 2012 மார்ச்சுத் திங்களில் நான் வெளியிட்ட "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் – 2023"–இல் பொருளாதார வளர்ச்சியின் ஆதாரங்களாகவும், ஊக்குச் சக்திகளாகவும் நமது நகரங்களையே நான் கருதுகிறேன். அவற்றில், கட்டமைப்பு வசதி, திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இல்லாத குப்பைகளற்ற சுற்றுச்சூழல், 24x7 மணிநேரமும் குடிநீர்வசதி, பாதுகாப்பான துப்புரவு ஆகியவை மக்களுக்கு ஒரேமாதிரியாகத் திறம்பட வழங்குவதற்கு வகை செய்யப்படும். நமது நகரங்களையும், மாநகரங்களையும், சுகாதாரமானவையாகவும், சுற்றுச்சூழலுக்குத் தோதான அனைத்து நகரிய வசதிகள் உள்ளவையாகவும் ஆக்க அரசு உறுதி பூண்டுள்ளது. நகர்ப்பகுதிக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக, அதாவது சென்னைக்காக, சென்னை

பெருநகர் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் ஏனைய அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றிற்காக ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என இரண்டு புதுமையான நிதியுதவித் திட்டங்களை நான் அறிவித்துள்ளேன். சாலைவசதி, தெருவிளக்குகள், குடிநீர், கழிவுநீரகற்றுதல், துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றிற்காக அடிப்படைக் கட்டமைப்பு வசதியின் தரங்களை மேம்படுத்துவதற்காக 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்காக 1,000 கோடி ரூபாய்க்கும், ஏனைய மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்காக 1,500 கோடி ரூபாய்க்கும் நான் ஒப்புதல் வழங்கியுள்ளேன்.

**19.** திறந்தவெளிக் கழிப்பிடமானது, சுகாதாரத்தைக் கெடுக்கக்கூடியவற்றில் முதன்மையானது ஆகும். தமிழ்நாடு, 2015 ஆம் ஆண்டில் ‘‘திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லா மாநிலம்’’ ஆகும் என நான் அறிவித்துள்ளேன். நகர்ப்பகுதிகளில், பொதுக் கழிப்பறைகள் அமைத்தல், நீர் மற்றும் மின்சார வசதியுடன் கூடிய கழிப்பறைகள் பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்காக ரூ.92.43 கோடி நான் ஒதுக்கீடு செய்துள்ளேன். தமிழ்நாட்டைத் திறந்த வெளியில் மலம் கழிப்பதிலிருந்து விடுவிக்க உறுதி செய்ய நாம் பலமுனை கொண்ட யுத்தியை மேற்கொள்ள வேண்டும். பலதரப்பட்ட மாற்றுத்திறனாளி உள்பட அனைவரும் பயன்படுத்தும் வகையில் போதிய எண்ணிக்கையில் கழிப்பிடங்களை

ஏற்படுத்த வேண்டும். இதனுடன், நன்கு கட்டப்பட்ட மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட கழிப்பிடங்களுக்கு அவர்களாகவே வலிய செல்வதற்கு தகவல், கல்வி, மற்றும் தகவல் தொடர்பு இயக்கம் மூலம் ஊக்குவிக்கப்பட வேண்டும். திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஊக்குவிக்கக் கூடாது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் இத்திட்டத்தை ஒரு இயக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆட்சியர்களே தலைமை ஏற்று அனைத்து பொறுப்பாளர்களையும் ஈடுபடுத்தி இதை ஒரு பெரிய இயக்கமாக மாற்றி இந்த வழக்கத்தைக் களைய வேண்டும். சம்பந்தபட்டவர்களை ஈடுபடுத்துதல், தொழில்நுட்பத்தில் புதுமைகள் கொண்டுவருதல் மற்றும் உள்கட்டமைப்பை உயர்த்துதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் அடையாளங்களாக இருக்க வேண்டும்.

**20.** இயற்கையின் சீற்றங்களை விரைவாக எதிர்கொள்வதாலும் தக்க பேரிடர் மேலாண்மையாலும் மக்கள் படும் அவதிகளை வெகுவாகக் குறைக்கலாம்.

**21.** சமீபத்தில் அரசு “தமிழ்நாடு சூரிய மின்சக்தி கொள்கை **2012**”ஐ வெளியிட்டது. அது எல்லோராலும் போற்றப்பட்டது. **2015–**க்குள் **3,000** மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்து நாட்டின் முன்னணியில் நிற்க, தமிழ்நாடு உறுதியாக உள்ளது. இதற்கு ஏதுவாக சூரிய மின் சக்தி உற்பத்தியில், நிதி முதலீட்டை ஊக்குவிக்கும் ஒரு

சாதகமான கொள்கையை அது மேற்கொண்டுள்ளது. மழைநீர் சேகரிப்புத் திட்டம் போல சூரிய மின் சக்தி உற்பத்தியை ஒரு மக்கள் இயக்கமாக ஆக்க அரசு எண்ணுகிறது. சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டை ஒரு உலகத் தலைநகராக்குவதே தமிழ்நாட்டின் குறிக்கோள். இது மாநிலத்தின் மின்சக்தி பாதுகாப்பிற்கும் கரித்தூள் வெளியேற்றத்தைக் குறைக்கும் வகையிலும் உதவும். சூரிய மின்சக்தி உற்பத்தியை ஒரு மக்கள் இயக்கமாக செயல்பட ஆட்சியர்கள் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

22. படித்த இளைஞர்களுக்கு உதவும் பொருட்டு அவர்கள் முதல் தலைமுறை தொழில் முனைபவர்களாக, 2012 ஆம் ஆண்டு முதல் ஒரு புதிய திட்டம் செயல்படுகிறது. (NEEDS) பெரிய தொழில் முனைவோர் வாடிக்கையாளருடன் தொடர்பு ஏற்படுத்துதலுடன், அவர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி, வர்த்தகத் திட்டங்களைத் தயாரித்தல், மற்றும் புதிய வணிக முயற்சிகளை அமைக்க அவர்களுக்கு நிதி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்த உதவி செய்யப்படும். வரவு செலவு மதிப்பீட்டில்ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.51.80 கோடி முதல் தவணையாக முன்னமே வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கும் மற்றும் பல்வேறு மாற்றுத் திறனாளி வகையினர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

அத்துடன், இத்திட்டத்தின்கீழ், பெண் பயனாளிகளுக்கு **50%** ஒதுக்கீடு அளிக்கப்படும். மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ், ஒரு சிறப்புப் பணிக்குழு மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளைத் தேர்வு செய்யப்படும். மாவட்ட ஆட்சியர்கள் இந்தத் திட்டத்தை பெரிய அளவில் விளம்பரப்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திட்டத்தைத் திறம்படக் கண்காணித்தும் குறித்தக் காலத்திற்குள் ஒருமுறை ஆய்வு செய்தும் திட்டம் வெற்றிகரமாக செயல்படுகிறதா என்று உறுதி செய்ய வேண்டும்.

**23.** இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல், ஆட்சியின் பற்பல அம்சங்கள் அடங்கியது. சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, அனைத்து வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். நான் ஒரு சில முக்கிய கருத்துகளை எடுத்துக் காட்டியிருக்கிறேன். இங்கு கலந்து கொண்டவர்களும் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பார்கள் என்று நம்புகிறேன். அதிகாரிகள் அவர்களுடைய கருத்துகளைத் துல்லியமாக முன் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய குறிப்புரைகளை முடிப்பதற்கு முன், “தொலைநோக்குத் திட்டம் தமிழ்நாடு–**2023**” –இன் இலக்கை அடைய நீங்கள் உங்கள் கடமையை ஆற்றி அரசுக்கு உதவக் கேட்டுக் கொள்கிறேன்.

V V V

## சென்னை, தலைமைச் செயலகத்தில் 18.12.2012 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம்

---

மாண்புமிகு அமைச்சர்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

அரசுச் செயலாளர்கள் மற்றும்
துறைத் தலைவர்களே, மாவட்ட ஆட்சியர்களே,

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணுவது தொடர்பான பிரச்சினைகளைக் குறித்து நாம், நேற்று பயனுள்ள விவாதத்தை மேற்கொண்டோம். இன்று நாம், மாநில மக்களின் வளர்ச்சியையும், வளத்தையும் ஊக்குவிக்கும் மேம்பாட்டுத் திட்டத்தின் மீது கவனம் செலுத்தக் கருதியுள்ளோம்.

நான், மாநிலத்தின் பொருளாதார மேம்பாடு தொடர்பான முக்கியப் பிரச்சினைகளில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி வந்துள்ளேன். மாநிலம் பெருமைப்படக்கூடிய வகையில், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை குறித்து வலுவான அடித்தளம் கொண்டிருப்பதால், நாட்டிலேயே வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறும் வகையில் மாநிலத்தின் வளர்ச்சியை நாம் தன்னம்பிக்கையுடன் உருவாக்கலாம். வளர்ச்சியுடன் இணைந்த நியாயமான பகிர்ந்தளிக்கத்தக்க முறையும் இருக்க வேண்டும் என்பதை,

அனைத்துப் பொருளாதாரச் சிந்தனையாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். வேளாண்மை, தொழில், சேவைகள் ஆகிய துறைகளில் உரிய கவனம் செலுத்தப்படுமானால், கல்வி, சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றில் வலுவான அடித்தளம் அமைப்பதன் மூலம் நாம் முன்னோக்கிச் செல்கிறபோது, இந்த அம்சம், நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களின் கவனத்தையும், தமிழ்நாட்டின் பால் நிச்சயமாக ஈர்க்கச் செய்யும். அரசு வகுத்தளித்துள்ள கொள்கைகள், இந்தத் துறைகளில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டால், இந்தத் தொலைநோக்குத் திட்டம், உண்மையாகிவிடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த முக்கியமான பொறுப்பை நிறைவேற்றுகிற பணி, மாவட்ட ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை, மிகவும் முக்கியமானதாகக் கருதி, உங்களுடைய பணிகளை, அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆற்றுமாறு நான் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்பட்டுள்ள பொருண்மைகளை நாம் தற்போது விவாதத்திற்காக, ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

*****

## சென்னை, தலைமைச் செயலகத்தில் **19.12.2012** அன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம்

---

மாண்புமிகு அமைச்சர்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

உள்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே,

காவல் துறைத் தலைவர் அவர்களே,

முதுநிலைக் காவல்துறை அதிகாரிகளே,

மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களே,

மற்றும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பேராளர்களே,

நாம் முதல் நாள் நடத்திய ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், சட்டம்–ஒழுங்கு, உள்கட்டமைப்புப் பாதுகாப்பு முதலிய முக்கியமான பொருண்மைகளில் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களிடையே நெருக்கமான ஒருங்கிணைப்பு அவசியம் என்பது நுணுக்கமாக அலசி ஆராயப்பட்டது. தற்போது நாம் காவல்துறை தொடர்பான பிரச்சினைகளில் தனிக் கவனம் செலுத்தி விவாதிக்க இருக்கின்றோம்.

காவல்துறை தொடர்பானவையைப் பொறுத்தமட்டில், நாட்டிலேயே பலவற்றிற்குத் தமிழ்நாடு முன்னுதாரணமாகவும், முதன்மையாகவும் உள்ளது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்வது பொருத்தமுடையதாகும். காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தை நான் 1991இல் துவங்கி வைத்தேன். இதனை முன்னோடியாகக் கொண்டு, இதே போன்ற திட்டம், 2001 ஆம் ஆண்டு மத்திய அரசாலும் அறிமுகப்படுத்தப்பட்டது. நான் முதல்முறை முதலமைச்சராக இருந்த காலத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் என்ற சிந்தனைக்கு 1992ஆம் ஆண்டு செயல் வடிவம் கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதிகள் நெடுக முனைப்பான கண்காணிப்பை உறுதி செய்யும் பொருட்டு கடற்பகுதிப் பாதுகாப்புக் குழுவை 1994 ஆம் ஆண்டில் எனது அரசு மீண்டும் ஆரம்பித்தது. 11 ஆண்டுகளுக்குப் பின்னரே இதுபோன்ற திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கத் துவங்கியது. சீருடைப் பணியாளர் தேர்வாணையம் 1991இல் அமைக்கப்பட்டது. நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட போது, 2002ஆம் ஆண்டில் அவசர விபத்து நிவாரண மையங்களும், 2003ஆம் ஆண்டில் நெடுஞ்சாலை சுற்றுக்காவல் கண்காணிப்புப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன. சிறுவர்கள் மனமகிழ் மன்றங்களானது (Boys Club) அதாவது தற்போது மறுபெயரிடப்பட்டுள்ள சிறுவர், சிறுமியர் மனமகிழ்மன்றங்களும் (Boys and Girls Club) 2003 ஆம் ஆண்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது. நான் மூன்றாவது

முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் காவல் துறையினருக்கான சலுகைவிலை அங்காடிகளும் (Canteen) காவல்துறைப் பணியாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் புறநோயாளி மருந்தகங்களும் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அக்டோபர் 2012 முதல் காவல் துறைப் பணியாளர்களுக்கென்று "உங்கள் சொந்த இல்லம்" என்ற திட்டத்தின் கீழ், 36,000 வீடுகள் கட்டுவதற்காக திட்டம் துவக்கப்பட்டது. அனைத்து வசதிகளுடன் கூடிய வாகனங்கள், படைக்கலங்கள் மற்றும் படைத்தளவாடங்கள் வாங்குவதும் மற்றும் முழுக் காப்பீட்டுத் திட்டத்தில் தொகை அதிகரிக்கவும், இடர்க்காப்பீட்டுப் படிகள், சீருடைப் படிகள் மற்றும் ஏனையப் படிகள் ஆகியவைகளுக்கு ஒதுக்கீடு செய்வதே எனக்கு முன்னுரிமை வாய்ந்த பொருளாக உள்ளது. அதே சிந்தனையில், தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை ஒன்று உருவாக்க நான் அக்டோபர், 2012 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தில் அறிவிப்பு வெளியிட்டேன். எல்லாவற்றிற்கு மேலாக, காவல்துறை சுதந்திரமாகத் தொழில் ரீதியாக செயல்படுவதற்கு எந்தவிதமாகவும் உறவினர்களோ அல்லது சமூக விரோதிகளோ அரசுக்கு வெளியிலிருந்து தலையிடுவதைத் தவிர்க்க நான் உறுதியளிக்கிறேன். மொத்தத்தில் சுருக்கமாகச் சொன்னால் திடமான திறனுடனும் கட்டுப்பாட்டுடனும் செயல்படுவதுதான் முதல் தேவையாகும். இங்கு குழுமியிருக்கும் மூத்தக் காவல்துறை அதிகாரிகளிடம் நான் எதிர்பார்ப்பது சட்டம் ஒழுங்குப்

பராமரிப்பு மற்றும் குற்றங்களைக் கண்டுபிடிப்பது, கட்டுப்படுத்துவது ஆகியவற்றில் ஈடுஇணையற்ற முடிவுகளைத்தான்.

பல காவல்துறை அதிகாரிகள் முதல்நாள் மாநாட்டில் விவாதித்தபோது பல கருத்துகளைத் தெரிவித்தனர். நிகழ்ச்சி நிரலில் இன்று விவாதத்திற்குத் தலைப்புகள் பட்டியலிடப்பட்டது சிந்தனையைத் தூண்டுவதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்தது. இத்தலைப்புகள் மீது நீங்கள் வழங்கிய பயனுள்ள கருத்துகள் காவல்துறையை நல்லமுறையில் செயல்படச் செய்யும். தற்போது நிகழ்ச்சி நிரலில் தொடர்ச்சியாக விவாதித்தால் அது நாம் ஒரு முடிவுக்கு வருவதற்கு ஏதுவாகும். அது பயனுள்ளதாகவும் மனநிறைவளிப்பதாகவும் இருக்கும்.

*****

## சென்னை, தலைமைச் செயலகத்தில் **19.12.2012** அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய நிறைவுரையின் தமிழாக்கம்

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு, ஒரு முக்கியமான நிருவாகச் செயல்பாடாகும். அதனை அரசு ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. நான் முழு ஈடுபாட்டுடனும் கவனமுடனும் இந்த மாநாடுகளை நடத்தி வந்துள்ளேன். இங்கு மாவட்ட ஆட்சியர்களாலும், காவல்துறை அதிகாரிகளாலும் தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு கருத்தின் மீது முடிவு எடுக்கப்பட்டது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என நான் கருதுகிறேன். ஒரு குழுவாக, நாம் அனைவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது நாம் செல்ல வேண்டிய பாதையைத் தெளிவுபடுத்தியது.

இங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும், பெருமளவில் பயனடைந்தனர். மாநாட்டின் முதல் நாளில் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், சட்டம் ஒழுங்கு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை விரிவாக விவாதித்தனர். இரண்டாவது நாளில், சாதாரண மக்களுக்கான வசதிகளை உயர்த்துவதற்கான அரசின் வளர்ச்சித் திட்டம் தொடர்பான எண்ணற்ற பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. இன்று, மூத்த காவல்துறை அதிகாரிகள், தற்போதைய நிலையை

எடுத்துரைத்து, காவல்படை செயல்பாடு குறித்த பல்வேறு நடவடிக்கை தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து வழிகாட்டி நெறியையும், ஆதரவையும் கோரினர். இந்த விவாதங்கள், மாநிலத் தலைமையிட அதிகாரிகள், களப்பணி செயல்பாடுகளைச் சிறப்பான வகையில் மதிப்பீடு செய்ய உதவும். பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகள், அரசின் கொள்கை முன்னுரிமைகளை முழுவதும் அறிந்து கொள்ள இது வகை செய்துள்ளது. கருத்துகள் தெரிவிக்கப்படுகின்ற போது, நிதித்தேவைகள், வட்டார மற்றும் சமூக சமவீதப்பங்கினை வகை செய்வதற்கான தேவை, விரைவான வகையில் செயல்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கான தேவை போன்ற பிரச்சினைகள் எழுகின்றன. இந்தப் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்வு காணப்பட்டு பொருள் பொதிந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை நான் தெரிவிக்க வேண்டும். மாநாட்டில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துகள், அனைவரும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு வழிநடத்திச் செல்வதுடன் சாதாரண மக்களின் தேவைகளை நிறைவேற்றும் என்று என் தரப்பில் நிறைவாகவும் திடமாகவும் உணருகிறேன்.

ஜனநாயகத்தில், மக்கள் தான் எஜமானர்கள் என்பதையும், சாதாரண மக்கள் கண்ணியம் நிறைந்த, தேவைகள் நிறைவேறிய, முழு வாய்ப்பு மற்றும் நம்பிக்கை கொண்ட வாழ்வினை வழிநடத்திச் செல்வதற்கு நாங்கள் அனைவரும் இங்கிருக்கிறோம். இதனை அடைவதற்கு,

இங்கு விவாதிக்கப்பட்ட பல்வேறு கருத்துகள் திட்டங்களாக உருப்பெற்றுள்ளன. இந்த மாநாட்டில் இந்த அணுகுமுறையானது, சாதனையை முறியடிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த மூன்று நாள் மாநாட்டில் நடைபெற்ற விவாதத்தின் விளைவாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. திருவாரூர் மாவட்டத்தில் ரூ.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் 4,000 இடங்களில் மீண்டும் செறிவூட்டும் கம்பங்கள் நிறுவப்படும்.

2. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில், "உயிரின வாழ்க்கைச் சூழல்–சுற்றுலா மையம்" மேம்படுத்தப்படும்.

3. திருவாரூர் மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி வகுப்பறைகளில், மாவட்ட நில வரைபடங்கள், தமிழ்நாடு நிலவரைபடம், இந்திய நிலவரைபடம் ஒட்டப்பட்டுள்ளன. இது, அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. தற்போது, விலையில்லாக் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இனிமேல், மூன்று நாட்களுக்கு விரிவான பயிற்சி அளிக்கப்படும்.

5. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப்பகுதிக்கு, பொது விநியோகத் திட்டத்திற்காக மேலும் இரண்டு நடமாடும் வேன்களுக்கு வகை செய்யப்படும்.

6. விழுப்புரத்திலுள்ள கள்ளக்குறிச்சிக்கு மாவட்டக் கல்வி அதிகாரி பணியிடம் ஒன்றுக்கு அனுமதியளிக்கப்படும்.

7. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அரிச்சந்திரா ஆற்றின் உபரி நீரானது, ஆற்றை ஒட்டிய நிலத்தில், 1,000 ஏக்கரில் நீர் சேமிப்புக் கட்டமைப்பு கட்டுவதன் வாயிலாகத் தேக்கி வைக்கப்படும். இது, குடிநீர் ஆதாரமாகப் பயன்படும்.

8. நாகப்பட்டினம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொகைக்குள் கட்டி முடிக்கப் பெறாத 7 பள்ளிகளை, முடிப்பதற்காக கூடுதல் நிதிக்கு அனுமதியளிக்கப்படும்.

9. 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில், தற்காலிக மஸ்தூர்களைப் பணியமர்த்துவதற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் மற்றும் ஏனைய தொற்று நோய்களை முனைப்புடன் கட்டுப் படுத்துவதற்கு மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்கப்படும்.

10. திருச்சி மாவட்டம் பச்சைமலையில் ‘உயிரின வாழ்க்கைச் சூழல்—சுற்றுலா’ மேம்படுத்தப்படும்.

11. பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு, பெரம்பலூரில் பால்பண்ணை ஒன்று அமைக்கப்படும்.

12. பெரம்பலூரில், தனி நெடுஞ்சாலைக் கோட்டம் ஒன்று அமைக்கப்படும்.

13. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதிகள் ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும்.

14. மாவட்ட ஆட்சியர்களுக்கான விருப்புரிமை நிதிகள் ரூ.10 இலட்சமாக உயர்த்தப்படும்.

15. திருவள்ளூர் மாவட்டத்தில் குடிசைகளில் வசிக்கின்ற 6,730 குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்படும்.

16. திருவள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைத் தரத்திற்கு மேம்படுத்தப்படும்.

17. திருவள்ளூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை 5–இல் விபத்து சிகிச்சை மையம் ஒன்று அமைக்கப்படும்.

18. வேலூர் மாவட்டத்தில், துணை வட்டாட்சியர் பதவித்தர வட்ட வழங்கல் அதிகாரிகளுக்கு வாகனங்கள் வழங்கப்படும்.

19. திருவண்ணாமலை கோயிலில் கிரிவலம் மற்றும் ஏனைய விழாக்கள் தொடர்பான செலவினம் அனைத்தும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையால் ஏற்கப்படும்.

20. திருவண்ணாமலையில், பால் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும்.

21. திருவண்ணாமலையில் தனி நெடுஞ்சாலைக் கோட்டம் ஒன்று அமைக்கப்படும்.

22. பல்வேறு துறைகளின் கீழ், பள்ளிகளில் பயில்கின்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற சீருடைகள் ஒரே மாதிரியாக இருக்கும்.

23. ஹெச்ஐவி, புற்றுநோய், காசநோய் காரணமாக ஏற்பட்ட தற்காலிகமான ஏலாமை நிலைக்காக "உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ், நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. டயாலிசிஸ் செய்து கொள்பவருக்கும் இத்தொகை நீட்டிக்கப்படும்.

24. தேனியில், பேரூராட்சி உதவி இயக்குநர் பணியிடம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படும்.

25. தேனியில் விளையாட்டு விடுதி ஒன்று அமைக்கப்படும்.

26. தேனி மருத்துவக் கல்லூரியில் எம்ஆர்ஐ ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்படும்.

27. தேனி மாவட்டத்தில் சின்னமனூருக்கும் மேகமலைக்கும் இடையே சாலை அமைக்கப்படும்.

28. ஈரோடு மாவட்டம் மணியாச்சிபள்ளத்தில் சாலை மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்படும்.

29. ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையானது, படகுக் குழாம் மற்றும் பூங்கா அமைக்கப்பட்டு சுற்றுலாப் பகுதியாக மேம்படுத்தப்படும்.

30. கரூரில் அமைக்கப்படவிருக்கின்ற சாயத் தொழிற்சாலைகள் பூங்காவிற்கு அரசுக் கடனும் உதவித் தொகையும் வழங்கப்படும்.

31. குளித்தலை, தோகைமலைப் பகுதிகளில், காவிரியை ஆதாரமாகக் கொண்டு, ரூ.12.50 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படும்.

32. கரூர் அரசு மருத்துவமனையானது, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மேம்படுத்தப்படும்.

33. நிலப் பதிவுருக்கள் குறித்த பல்வேறு மென்பொருட்கள் இணைக்கப்படும்.

34. கன்னியாகுமரியில் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு 14 கூடுதல் பணியாளருக்கு அனுமதி வழங்கப்படும்.

35. குழித்துறை ஆற்றிலிருந்து நாகர்கோவில் நகராட்சிக்குத் தண்ணீர் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்படும்.

36. கன்னியாகுமரியிலுள்ள புராதன அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்படும்.

37. நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி ஆட்சியர் அலுவலகத்தில் ரூ.9 கோடி செலவில் கூடுதலாக 4 தளங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

38. காஞ்சிபுரம் நகரிலுள்ள அனைத்துச் சாலைகளும் செப்பனிடப்படும்.

39. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோழிமேட்டிலும் உத்திரமேரூரிலும் சாலை மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

40. காஞ்சிபுரம் வட்டத்தில் அதிக எண்ணிக்கையில் தெரு விளக்குகளுக்கு வகை செய்யப்படும்.

41. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையை இணைக்கின்ற 56 சாலைகள் செப்பனிடப்படும்.

42. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பம்மல், அனகாபுத்தூரில் சவ்வூடுபரவல் தளவாடத்துடன் கூடிய 15 துணைக் கிணறுகளுக்கு வகை செய்யப்படும்.

43. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாவட்டக் காவல்துறை அலுவலக கட்டடத்திற்கு அனுமதியளிக்கப்படும்.

44. கோயம்புத்தூரில் ஏ.ஆர். வளாகத்திற்கு அனுமதியளிக்கப்படும்.

45. காவல்துறைப் பணியாளருக்கென மேட்டுப் பாளையத்தில், துயிற்கூடம் ஒன்று கட்டப்படும்.

46. தூத்துக்குடி மாவட்டத்தில், திருச்செந்தூர் கோயிலுக்குச் செல்கின்ற சாலை செப்பனிடப்படும்.

47. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில், செயற்கை ஹாக்கி ஆடுகளம் அமைக்கப்படும்.

48. புதுக்கோட்டை மாவட்டத்தில் குளத்தூர், கரம்பக்குடி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை வட்டங்களில் உள்ளடங்கிய பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதியளிக்கப்படும்.

49. புதுக்கோட்டை பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும்.

50. கந்தர்வகோட்டை பேருந்து நிலையம் விரிவுபடுத்தப் படும்.

51. அரியலூரிலுள்ள நிலை உயர்த்தப்பட்ட மாவட்ட மருத்துவமனைக்குத் தேவையான கட்டடங்களுக்கும் சாதனங்களுக்கும் வகை செய்யப்படும்.

52. படிமங்களுக்கான அருங்காட்சியகம் ஒன்று அரியலூரில் அமைக்கப்படும்.

53. திருப்பூர் மாவட்டத்தில் துணைப் பதிவாளர் (பால்வளம்) கூடுதல் பணியிடம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்படும்.

54. திருப்பூர் மாவட்டத்தில், பொது விநியோகத் திட்டத்திற்கென நடமாடும் பிரிவு ஒன்றுக்கு அனுமதி வழங்கப்படும்.

55. ஈரோடு மாவட்டத்தில், காங்கேயம் வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும்.

56. சிவகங்கை மாவட்டத்தில், வைகை இடதுகரையில் அமைந்துள்ள மஞ்சள்பட்டினத்தில் இளையான் குடியையும், பரமக்குடியையும் இணைக்கின்ற மேம்பாலம் செப்பனிடப்படும்.

57. சிவகங்கை மாவட்டத்திலுள்ள பிள்ளையார்பட்டியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

58. சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டத்தில் பொட்டப்பாளையத்திலுள்ள துணை மின் நிலையமானது 110 KVA மின்திறன் கொண்டதாக மேம்படுத்தப்படும்.

59. இராமநாதபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையானது, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

60. MGNREGS-இன் கீழ் 1 மீட்டர் ஆழத்திற்கு பண்ணைக் குட்டைகள் உருவாக்கப்படுகின்றன. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை வாயிலாக ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

61. இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் மருத்துவமனையில் தொற்று நோய்களுக்கான பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

62. இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே 4 தடுப்பணைகள் கட்டப்படும்.

63. பார்த்திபனூரைச் சுற்றி புறவழிச்சாலை அமைக்கப்படும்.

64. இராமநாதபுரம் மாவட்டத்தில், தற்போது, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற 35 துறைகளுக்காக, பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

65. விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் நகராட்சியில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

66. விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படும்.

67. தருமபுரி மாவட்டம் சித்தேரி பகுதியில், சிறுவர் சிறுமியருக்கென தனித்தனி மாணவர் இல்லங்கள் அமைக்கப்படும்.

68. தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் மற்றும் மொரப்பூர் வட்டாரங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்.

69. தருமபுரி மாவட்டத்தில் தற்போது ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள நாற்றுப்பண்ணை தோட்டக் கலைத்துறைக்கு மாற்றப்படும்.

70. தருமபுரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கிருபானந்தவாரியார் மேனிலைப் பள்ளி, பள்ளிக் கல்வித்துறையால் ஏற்றெடுத்துக் கொள்ளப்படும்.

71. தருமபுரி மாவட்டத்திலுள்ள கரியமங்கலத்தில், பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைக்கப்படும்.

72. குழந்தைகளைப் பள்ளிக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்று திரும்ப அழைத்து வருகிற நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

73. நீலகிரி மற்றும் ஏனைய மலைப்பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்காக, அவர்களுடைய சீருடையின் ஒரு பகுதியாக கம்பளி ஆடைகள் வழங்கப்படும்.

74. உதகமண்டலத்திலுள்ள மாவட்ட மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தரத்திற்கு நிலையுயர்த்தப்படும்.

75. நீலகிரி மாவட்டத்தில் உள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகிற 28 அலுவலகங்களுக்கு இடவசதி அளிப்பதற்காகக் கட்டடம் ஒன்று கட்டப்படும்.

76. உணவுப்பட்டியலில் அண்மையில் சேர்க்கப்பட்ட பல்வேறுவகை அரிசி உணவு மற்றும் உணவு வகைகளைத் தயாரிப்பதற்காக அனைத்து மதிய உணவு மையங்களுக்கும் மிகப் பெரிய வாணலி மற்றும் கரண்டி ஆகியவை வழங்கப்படும்.

77. கொடைக்கானலில் வண்டி நிறுத்தும் வசதியைச் செய்து கொடுப்பதற்காக, போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலம், நகராட்சிக்கு மாற்றப்படும்.

78. பழனியில் அடிவேதனைப் படுகாய மையம் ஒன்று அமைக்கப்படும்.

79. திண்டுக்கல் மருத்துவமனைக்காகக் கூடுதலாகக் கட்டடங்கள் கட்டப்படும்.

80. திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் பகுதியில் குடிநீர் வழங்கலுக்கான பழைய குழாய்த் தொடர்களுக்குப் பதிலாகப் புதிய குழாய்த் தொடர்கள் அமைக்கப்படும்.

81. குடிநீர் வழங்கலைப் பெருக்குவதற்காக கொடைக்கானலில் உள்ள கீழ்க்குந்தாறில் தடுப்பணை ஒன்று கட்டப்படும்.

82. உழவர்களுக்குப் பயனுள்ள முறையில் பாசனம் அளிப்பதற்காகப் படுகை அளவை மீட்க இயலும் வகையில் ரூ. 68.55 கோடி மதிப்பீட்டுச் செலவில் காவேரி ஆற்றின் கிளை ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால் ஆகியவற்றில் 25 படிநிலைச் சாய்வு அமைப்புகள் கட்டப்படும்.

83. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திண்டிவனத்தில் பேருந்து நிலையம் அமைக்க அனுமதியளிக்கப்படும்.

84. போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மதுரை மாநகரில் மேம்பாலங்கள் கட்டப்படும்.

85. கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவில் குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக மின் உற்பத்திச் சாதனம் ஒன்று அனுமதிக்கப்படும்.

86. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள சில பழைய கட்டடங்களை இடித்த பின்னர் அந்த இடத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

87. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நெல்லித்துறைச் சாலை மீண்டும் அமைக்கப்படும்.

88. பெற்றோர்கள் ஹெச்.ஐ.வி. நோயினால் மரணமடைந்தால் அனாதைகளான குழந்தைகளுக்கு மாதாந்திர மானியம் அளிக்கப்படும்.

89. தூத்துக்குடி மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்குக் கணக்காளர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவியிடங்கள் அனுமதிக்கப்படும்.

90. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோயில்பட்டிக்கு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றுக்கு அனுமதியளிக்கப்படும்.

91. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடியில் மனநல மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்.

92. நீலகிரி மாவட்டத்திலுள்ள அருங்காட்சியகம், ‘‘பழைய கல் வீட்டிற்கு’’ மாற்றப்படும்.

93. கோயம்புத்தூருக்கு இரண்டு ஆயுத சேம காலாட்படைப் பிரிவுகள் அனுமதிக்கப்படும்.

94. பிள்ளையார்பட்டி, இராமேஸ்வரம் மற்றும் ஏர்வாடியில் கண்காணிப்பு டிவி கேமராக்கள் நிறுவப்படும்.

95. முக்கியமான தலைவர்களின் சிலைகளைப் பராமரிப்பது குறித்து அரசின் முந்தைய உத்தரவுகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். சிலைகள், இரும்புக் கம்பி வேலி, பூட்டு, சாவி ஆகியவை மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனுடைய சாவி, மாவட்ட ஆட்சியரிடம் / காவல்துறைக் கண்காணிப்பாளரிடம் இருக்க வேண்டும்.

96. சிவகங்கைக்கு, DPO இணைப்புக் கட்டடம் ஒன்றுக்கு அனுமதியளிக்கப்படும்.

97. இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய வெப்ப எரிசக்திப் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

98. இராமநாதபுரம் மாவட்டத்தில், கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் திருவாடானை ஆகியவற்றில் இரு பாலினருக்கான கல்லூரிகள் தொடங்கப்படும்.

99. இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன் பதப்படுத்தும் தொழிற் பூங்காக்கள் அமைக்கப்படும்.

100. இராமநாதபுரம் – தூத்துக்குடி சாலை, நான்கு வழிச்சாலையாக மாற்றப்படும். தொழிலகப் பெருவழி ஒன்று அமைக்கப்படும்.

101. இராமநாதபுரம் மாவட்டத்தில், ஒரு மாபெரும் நவீன மின்சக்தி நிலையம் நிறுவப்படும்.

102. திருச்சி மாவட்டம், முசிறி, துறையூர், ஜீயபுரம், லால்குடி ஆகிய இடங்களில் நான்கு போக்குவரத்துக் காவல்நிலையங்கள் அமைக்கப்படும்.

103. திருச்சி மாவட்டம், ஜீயபுரம் உட்கோட்டத்திற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

104. திருச்சி மாவட்டத்தில் 10 காவல் நிலையங்கள் பெரிய காவல் நிலையங்களாகவும், 7 காவல் நிலையங்கள், நடுத்தரக் காவல்நிலையங்களாகவும் நிலையுயர்த்தப் படும்.

105. திருச்சி மாவட்டத்திற்கு 3 கூடுதல் ஆயுத சேம காலாட்படைப் பிரிவுகள் அனுமதிக்கப்படும்.

106. திருச்சி மாவட்டத்தில், ஆயுத சேமக் காவலர்களுக்காக, 85 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

107. திருச்சி மாவட்டத்தில், 3 கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் 5 மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

108. திருச்சி மாவட்டத்தில், காவல்துறைப் பணியாளர்களுக்காக, சமுதாயக் கூடம் ஒன்றும், சிற்றுண்டிச்சாலை ஒன்றும் கட்டப்படும்.

109. திருச்சி, காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு முகாம் அலுவலகம் ஒன்று கட்டப்படும்.

110. சோதனைச் சாவடிகளில் களவுபோன பொருட்களைச் சோதனை செய்வதற்காக, உண்மையான நேர அடிப்படையில், போக்குவரத்துத் துறையிடம் உள்ள தகவல், காவல்துறைக்கு அளிக்கப்படும்.

111. திருச்சி மாவட்டத்தில், கோயில் பாதுகாப்புப் படையில் ஊர்க்காவலர்களுடன், 97 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதியளிக்கப்படும்.

112. தருமபுரியில் சாதிக்கலவரத்தில் முழுமையாக அழிந்துபோன வீடுகளுக்கு மாற்றாக 99 வீடுகள் கட்டப்படும்.

113. தருமபுரி மாவட்டத்தில் நக்சல்களால் பாதிக்கப்பட்ட 32 கிராமங்களுடைய மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.7 கோடியிலிருந்து ரூ.20 கோடியாக அதிகரிக்கப்படும்.

114. தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை ஏற்படுத்தப்படும்.

115. தருமபுரி மாவட்டத்திலுள்ள பெண்ணாகரம் மற்றும் அரூர் வட்டங்களில் சிப்காட் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும்.

116. காவல்துறைப்பணியாளர் மீது பதிவு செய்யப்படும் தனிநபர் வழக்குகளில் வழக்குரைஞர்கள் வாதாடுவதற்காக மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு நிதி வழங்கப்படும்.

117. காவல்துறைப் பணியாளர்களில், தனிநபர் முயற்சிக்காக தற்போது வழங்கப்பட்டுவரும் ரொக்க வெகுமதியை ரூ.300/– லிருந்து ரூ.600/– ஆகவும், குழுவின் கூட்டு முயற்சிக்காக வழங்கப்பட்டு வரும் ரொக்க வெகுமதியை ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

118. கொடைக்கானலில் உள்ள மலைப்பாதைகள் அகலப்படுத்தப்படும்.

119. கொடைக்கானலில் உள்ள மனவனூரில் பெரும் சுற்றுலாத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

120. பழனி கோவிலுக்குக் கூடுதலாக ஒரு ரோப் கார் வழங்கப்படும்.

121. திண்டுக்கல் மாவட்டத்தில் சேமக்காவல்படைப் பிரிவுக்கான நிருவாகக் கட்டடத்திற்கு ஒப்புதல் வழங்கப்படும்.

122. திண்டுக்கல், தேனி ஆகிய இடங்களில் காவல்துறைப் பணியாளர்களின் நலனுக்காக சமுதாயக் கூடம் கட்டப்படும்.

123. குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் முன் அறிவிப்புச் செய்யாத சாலை மறியலுக்குத் தடை விதிக்கப்படும்.

124. சீர்காழி மற்றும் மயிலாடுதுறை பகுதிகளில் மேலும் இரண்டு மதுவிலக்கு சுங்கச் சாவடிகளுக்கும் ஒரு நடமாடும் சுங்கச் சாவடிக்கும் அனுமதி வழங்கப்படும்.

125. விபத்து நிவாரண நிதியின் கீழ், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி ஒப்புதல் CMPRF வழக்குகளில் உள்ளதைப் போன்று எளிமையாக்கப்படும்.

126. கன்னியாகுமரி மாவட்டத்தில் சேமக் காவல் படைப்பிரிவுக்கு (AR Platoons) ஒப்புதல் வழங்கப்படும்.

127. கன்னியாகுமரி மாவட்டத்தில், மாநிலங்களுக்கு இடையேயான 37 சுங்கச் சாவடிகளில் தனியாகக் காவல்துறைப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

128. கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறை அலுவலகங்களுக்காக ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்படும்.

129. மதுரையில் கூடுதலாக ஒரு படைப்பிரிவு ஏற்படுத்த அனுமதி அளிக்கப்படும்.

130. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சோழவந்தான், மேலூர் ஆகிய பகுதிகளில் ரிப்பீட்டர் ஸ்டேஷன் (Repeater station) மற்றும் 100 வாக்கிடாக்கிகள் வழங்கப்படும்.

131. மதுரை மாவட்டத்தில் வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களுக்கு கம்பியில்லாத் தொடர்பு சாதனம்/ஒயர்லெஸ் வழங்க அனுமதியளிக்கப்படும்.

132. மதுரை மாவட்டம், மேலூர், ஒத்தக்கடை, ஊமச்சிக்குளம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

133. சாதியற்ற சமுதாயம் பற்றிய பாடங்கள் உருவாக்கப்பட்டு தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

134. நாடகங்கள் மூலம் சாதியற்ற சமுதாயம் என்ற கொள்கையைப் பரப்புவதற்காக சிறந்த கொள்கை பரப்பாளர் மூலமாக கல்வி மற்றும் காவல் துறையின் மூலம் கூட்டு இயக்கம் ஏற்படுத்தப்படும்.

135. மதுரையில் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளருக்காக (A.R) குடியிருப்புகளும், A.R–க்காக நிருவாகக் கட்டடங்களும் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்படும்.

136. மதுரையில், ஏழு காவல் நிலையங்களுக்காக ஒவ்வொன்றிற்கும் 2 மோட்டார் சைக்கிள் ரோந்து வண்டிகள் வழங்கப்படும்.

137. மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை நீதிமன்றத்திற்கு அருகே காவல்துறைப் பணியாளர்களுக்கென விடுதி கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்படும்.

138. போக்குவரத்து அபராதங்களாக வசூலிக்கப்பட்ட நிதியில் 25% ஐ சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து போக்குவரத்து எதிர்பாராத நிதியாக மாவட்டங்களுக்கு வழங்கப்படும்.

139. மதுரை மாநகரக் காவல்துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

140. மதுரை மாநகராட்சியில், மாநகரக் காவல்துறை அதிகார எல்லையில் கூட்டு முனையம் உருவாக்கப்படும்.

141. மதுரையில், காலவாசல் சந்திப்பு மற்றும் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலங்கள் கட்டப்படும்.

142. பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக் காலங்களில் விரைவான மீட்புப் பணிக்கு ஏதுவாக முதன்மைச் சாலையிலிருந்து பட்டாசுத் தொழிற்சாலை வரையிலான பகுதிகள் வரை நன்கு சாலை வசதிகள் பராமரிக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும்.

143. காவல்துறை அதிகாரிகளுக்கான காணொளிக் கூட்ட வசதிகளுக்குப் புத்துயிர் அளிக்கப்படும்.

144. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கு உயர் தூக்கிகள் (Skylift) (101 மீ. உயரம்) இரண்டு வாங்கப்படும்.

145. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று மருத்துவமனைகளுக்கு இரத்தப் பரிசோதனைக் கருவிகள் வாங்கப்படும்.

146. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மணிமங்கலம், செம்மங்கலம், ஒட்டேரி காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

147. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று சேமக்காவல் படைப்பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

148. சென்னை நகரின் எல்லைப்பகுதியில் உள்ள 12 காவல் நிலையங்கள் படைக்கல வகையில் பாரம்மிக்க காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

149. அரியலூர் மாவட்டத்தில், சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து லாரிகள் சென்று வருவதால் 42 கி.மீ. நீளத்திற்கான சாலைகள் பழுதடைந்துள்ளது. அவை 40 டன் பளுவுடன் கூடிய வண்டிகள் சென்றுவரக்கூடிய அளவுக்கு செப்பனிடப்படும்.

150. அரியலூர் மாவட்டத்தில் 274 சிற்றூர்களுக்குக் குழாய்த் தொடர் பதிக்கப்படும்.

151. அரியலூர் மாவட்டத்தில் மேலராமநல்லூரில் தரைப்பாலம் அமைக்கப்படும்.

152. அரியலூரில் சிட்கோ தொழிற்பேட்டை வளாகம் அமைக்கப்படும்.

153. அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல்நிலையங்கள் அமைக்கப்டும்.

154. நாமக்கல் மாவட்டத்தில் போக்குவரத்துக் காவல் பிரிவு அமைக்கப்படும்.

155. நாமக்கல் மாவட்டத்தில் செயினேஜ் 90/2 இல் SH 79 –இல் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

156. நாமக்கல் மாவட்டத்தில் காவல்துறைப் பணியாளர்களுக்கென சமுதாயக்கூடம் அமைக்கப்படும்.

157. பெரம்பலூர் மாவட்டத்தில், திருச்சி–சென்னை நெடுஞ்சாலையில் ஜவுளிப்பூங்கா அமைக்கப்படும்.

158. பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் வட்டாரத்தில் மகளிருக்கான கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.

159. பெரம்பலூர் மாவட்டம் மங்களமேட்டில் உட்கோட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

160. பெரம்பலூர் மாவட்டத்திற்கு 2 நெடுஞ்சாலை ரோந்து வண்டிகள் வாங்கப்படும்.

161. புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக வருவாய் உட்கோட்டம் ஏற்படுத்தப்படும்.

162. புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவுரு அறைக்கட்டடம் கட்டப்படும்.

163. புதுக்கோட்டையில் வட்டச்சாலையும், அறை வட்டச் சாலையும் அமைக்கப்படும்.

164. கந்தவர்க்கோட்டை மற்றும் கரம்பக்குடியில் கலை, அறிவியல் கல்லூரி துவங்கப்படும்.

165. புதுக்கோட்டையில் சேமக் காவல் படைப்பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

166. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மற்றும் பொன்னமராவதியில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் இரண்டு அமைக்கப்படும்.

167. சேலம் மாவட்டத்தில் AVR ரவுண்டானா, ஐந்து ரோடு சந்திப்பு, குரங்குச் சாவடியில் மூன்று மேம்பாலங்கள் கட்டப்படும்.

168. சேலம் மாவட்டம், மேச்சேரி, நங்கவள்ளி வட்டாரங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும்.

169. பந்தோபஸ்து / பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறைப் பணியாளர்களுக்கென மாவட்டத்திற்கு ஐந்து நடமாடும் கழிப்பறைகள் அமைத்துத்தரப்படும்.

170. சிறு கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதற்காக காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகாரம் ரூ. 10,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்படும்.

171. சேலம் மாநகருக்கு அருகிலுள்ள கொண்டாலம்பட்டி இரும்பு ஆலை , வீராணம் காவல் நிலையம், 14 முதன்மைக் கிராமங்கள் சேலம் மாநகருடன் இணைக்கப்படும்.

172. சேலம் மாவட்டத்திற்கு 56 சிசி டிவி கேமராக்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும்.

173. சேலம், காவல்துறை தலைமை ஆய்வாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டித்தரப்படும்.

174. தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைப் போன்று, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சிறப்பு சமூக பொருளாதார மேம்பாட்டு நிதி உருவாக்கப்படும்.

175. சிவகங்கை மாவட்டத்தில் உணவுப் பதப்படுத்துதல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தப்படும்.

176. சிவகங்கையில் சேமக் காவல் படைப் பிரிவுக்காக நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

177. சிவகங்கையில் 2 சேமக் காவல்படை பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

178. தேவகோட்டை, இளையான்குடி, மானாமதுரை, சிங்கம்புணரியில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

179. தஞ்சாவூர் மாவட்டம், பள்ளி அஹ்ரகாரத்தில் போக்குவரத்து மேம்பாட்டு வசதியும், நான்குவழிச் சந்திப்பும் ஏற்படுத்தப்படும்.

180. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு சி டி ஸ்கேன் வசதி செய்து தரப்படும்.

181. தஞ்சாவூர் பாலக்கரை பாலம் புதுப்பிக்கப்படும்.

182. தஞ்சாவூரில் கூடுதலாக இரண்டு சேமக்காவல் படைப் பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

183. தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்தில் 100 சிசி டிவி கேமராக்களுடன் கூடிய நவீன கட்டுப்பாட்டு அறைகள் இரண்டு ஏற்படுத்தப்படும்.

184. தஞ்சாவூருக்கு இரண்டு நெடுஞ்சாலை ரோந்துப்பணி வண்டிகள் கூடுதலாக வழங்கப்படும்.

185. தஞ்சாவூரில் சேமக் காவல்படைப் பணியாளர்களுக்காக கூடுதலாக 200 குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

186. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் திருவிடைமருதூரில் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் அமைக்கப்படும்.

187. தஞ்சாவூர் மாவட்டக் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குத் தனி பணியாளர்களுக்கு வகை செய்யப்படும்.

188. தஞ்சாவூரில் 5 காவல் நிலையங்கள் ஆய்வாளர் அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

189. கரூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

190. கரூரில் வட்டச்சாலை அமைக்கப்படும்.

191. கரூர் மாவட்டத்திலுள்ள 6 காவல் நிலையங்கள் நடுத்தர வகைக் காவல்நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

192. கரூர் மாவட்ட பசுபதிப்பாளைய காவல்நிலையம் மேம்பட்ட காவல் நிலையமாக (Heavy type) தரம் உயர்த்தப்படும்.

**193.** கரூர் மாவட்டம் குளித்தலை நகராட்சியில் போக்குவரத்துக் காவல்நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

**194.** நக்சல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 இலட்சம் தொடர் மானியத்துடன் கூடுதலாக ஒரே முறை வழங்கக்கூடிய மானியமாக ரூ. 1 கோடி வழங்கப்படும்.

**195.** தேனி மருத்துவக் கல்லூரிக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி செய்து தரப்படும்.

**196.** கேரள எல்லையோரப் பகுதிகளிலுள்ள தமிழர்களின் குழந்தைகள் தேனி மாவட்ட விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**197.** பாதுகாப்புப் பணிக்காக ஓரிடத்திலிருந்து பணியிடமாற்றம் செய்யப்பட்ட காவல்துறைப் பணியாளர்களின் பயனுக்காக தேனி மாவட்டம் கண்ணகி கோயிலின் எல்லைப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டப்படும்.

**198.** தேனி மாவட்டத்தில் இரண்டு சேமக் காவல் படைப் பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

**199.** பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீ விபத்தின் போது திறம்படத் தீயணைப்பதற்குப் பட்டாசுத் தொழிற்சாலைகளின் மேற்கூரைகளில் தெளிப்பான்களை அமைப்பது கட்டாயமாக்கப்படும்.

**200.** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகரத்தில் தனி போக்குவரத்துப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

**201.** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் தனியாக தேசிய நெடுஞ்சாலைப் போக்குவரத்துப் பிரிவு அமைக்கப்படும்.

**202.** விருதுநகரில் A.R. நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

**203.** சிவகாசி நகரில் வெளிவட்டச் சாலை அமைக்கப்படும்.

**204.** ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வத்திராயிருப்பில் சேமக் காவல் படைப் பிரிவு (AR Company) ஏற்படுத்தப்படும்.

**205.** விருதுநகர் மாவட்டத்திலுள்ள W. புதுப்பட்டி மற்றும் கடமாப்பட்டி காவல் நிலையங்கள், ஆய்வாளர் தலைமையிலான காவல்நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

**206.** விழுப்புரம் மாவட்டத்தில் போக்குவரத்து விதிகள் குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்கான பிரத்யேகமாக சாலைப் பாதுகாப்பு வண்டி வழங்கப்படும்.

**207.** விழுப்புரம் மருத்துவக் கல்லூரியில் 24 மணி நேர விபத்து சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

**208.** சங்கராபுரத்தில் SIDCO பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

209. ஆரோவில் காவல் நிலையம், ஆய்வாளர் தலைமையின் கீழ் செயல்படும் காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்.

210. கூட்டுறவு வங்கிகளில் சிசி டிவி கேமராக்களும், burglar அலாரங்களும் நிறுவப்படும்.

211. விழுப்புரத்தில் சேமக் காவல் படைப் பிரிவு இரண்டு ஏற்படுத்தப்படும்.

212. விழுப்புரத்தில் ஊர்க்காவல் படை அலுவலகத்திற்கு நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

213. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி திருக்கோவிலூரில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் இரண்டு ஏற்படுத்தப்படும்.

214. வேம்பார், வீரபாண்டிப்பட்டினம், பெரியதாழை, கல்லாமொழி, கீழவைப்பார் முதலிய 5 இடங்களில் கடல் அரிப்புத் தடுப்பு அமைப்புகள் அமைக்கப்படும்.

215. தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு பகுதியில் நீர் விளையாட்டு மையம் அமைக்கப்படும்.

216. தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும்.

217. தூத்துக்குடி மாவட்டத்தில் தொழிற்சாலைகளுடன் இணைந்து PPP முறையில், கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை அமைக்கப்படும்.

218. மீன்பிடிப் படகுகளின் அடித்தளத்தை மாற்றுவதற்கு மானியம் 50% ஆக அதிகரிக்கப்படும்.

219. தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்கியூபா டைவிங் கருவி நீரில் மூழ்குவதற்கு வாங்குவதற்கு மானியம் வழங்கப்படும்.

220. இடர் நீக்குப் பணிக்காக தூத்துக்குடி மாவட்டத்தில் மூன்று கண்காணிப்புப் படகுகள் மீன் வளத்துறைக்கு வழங்கப்படும்.

221. தூத்துக்குடி மாவட்டத்தில் சேமக் காவல் படைக்கு நிருவாகக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்படும்.

222. தூத்துக்குடி மாவட்டத்தில் சேமநலப் படைப் பணியாளர்களுக்கு 458 குடியிருப்புகள் கட்டப்படும்.

223. திருவாரூர் மாவட்டத்தில் இ.சி.ஆர். சாலையில் இரண்டு நெடுஞ்சாலை ரோந்து குழு அமைக்கப்படும்.

224. திருவள்ளூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டையில் விருந்தினர் மாளிகை கட்டப்படும்.

225. குண்டர் சட்டத்தில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்படும்.

(1) குற்றமே செய்வதை வழக்கமாகக் கொண்டவர்களுக்குப் பதிலாக, ஒரு குற்றம் மட்டுமே செய்யும் குணம் கொண்டவர்கள் கூட பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவர்.

(2) சைபர் குற்றம்

(3) வாகனத்தைப் பறிமுதல் செய்தல்.

226. குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குகள் தயாரிப்பதற்கான தொகை ரூ. 3,000 லிருந்து ரூ. 8,000 ஆக அதிகரிக்கப்படும்.

227. திருவாரூர் மாவட்ட திட்ட அலுவலகக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு ரூ. 96.11 இலட்சம் கூடுதல் நிதி வழங்கப்படும்.

228. திருவாரூர் மாவட்டத்தில் காவல்துறைக் கூடுதல் துணைக் கண்காணிப்பாளர் இருவருக்கும் காவல்துறைத் துணைக் காணிப்பாளர் நால்வருக்கும் குடியிருப்புக் கட்டித்தரப்படும்.

229. கைதியின் பாதுகாப்போடு அழைத்துச் செல்பவர்களுக்கான உணவுக் கட்டணம் ஒருவருக்கு ரூ. 35லிருந்து ரூ. 100 ஆக அதிகரிக்கப்படும்.

230. வேலூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

231. வேலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**232.** வேலூரில் மேலும் இரண்டு சேமக் காவல் படைப் பிரிவு அமைக்கப்படும்.

**233.** வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

**234.** வேலூரில் சேமக்காவல் படைப் பிரிவைச் சேர்ந்த 162 பணியாளர்களுக்குக் குடியிருப்புக் கட்டித்தரப்படும்.

**235.** குற்றம் தொடர்பான பிரச்சினைகளுடன் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட அளவில் மேற்கொள்வதற்கு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும்.

**236.** திருவண்ணாமலையில் 14 கிலோ மீட்டர் கிரிவலப் பாதையானது விரிவாக்கம் செய்வதன் மூலமும் அவசர வழிகள் அமைப்பதன் மூலமாகவும் மேம்படுத்தப்படும். விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும்.

**237.** திருவண்ணாமலை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடுகாட்டிற்குச் செல்வதற்குப் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு நிதி வழங்கப்படும்.

**238.** திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம், தண்டாரம்பட்டு, வேட்டவலம் மற்றும் அவலாக்கோட்டை ஆகிய இடங்களில் நிரந்தர பேருந்துநிலையம் அமைக்க 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும்.

**239.** இரண்டு சேமக் காவல் படைப் பிரிவு திருவண்ணாமலையில் அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

**240.** மாவட்டக் காவல்துறை அதிகாரி, சேமக் காவல் அதிகாரி மற்றும் கண்காணிப்புக் காவல் அதிகாரி ஆகியோருக்குக் குடியிருப்புகள் திருப்பூர் பெருந்திட்ட வளாகத்தில் ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்படும்.

**241.** இரண்டு சேமக் காவல் படைப் பிரிவு திருப்பூரில் அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

**242.** திருப்பூருக்கு சிறப்புப் பிரிவுகளாக கைரேகை அச்சு, புகைப்படப் பிரிவுகள், மோப்பநாய்ப் பிரிவு, சுருக்கெழுத்து அலுவலகம், காவல்துறை சுற்றுலா பங்களா, எம்.எப்.எஸ்.எல் ஆகியவை அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

**243.** கெயில் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு நில உடமையாளர்களுக்கு இழப்பீடு அங்காடி மதிப்புடன் இணைந்த படி வழங்கப்படும்.

**244.** சென்னையில் **2,500** சேமக்காவல் துறைப் பணியாளர்களுக்கு நிலையான படைக் குடியிருப்பு கட்டப்படும்.

**245.** தற்காலிக முன் கட்டமைப்புப் படைக் குடியிருப்பு தமிழ்நாடு சிறப்புக் காவல் துறைப் படைப்பிரிவுக்கு சென்னையில் அமைக்கப்படும்.

246. நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாக சென்னை எழும்பூர் காவல்துறை மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

247. காவல்துறையினருக்காகவே சிறப்பு கேன்டீன் சென்னை நகரக் காவல் துறைக்கு எழும்பூரில் அமைக்கப்படும்.

248. சேமக்காவல் படைக்கு சென்னையில் நிருவாகக் கட்டடம் அமைக்கப்படும்.

249. 35 அம்பாசிடர் வாகனங்களை முக்கியமானவர்களுக்கும் மற்றும் அவர்களுடன் செல்லும் படைப்பிரிவு வாகனங்களும் உயர்வேக வாகனங்களாக மாற்றப்படும்.

250. திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்று சேமக்காவல் பிரிவு அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

251. திருவள்ளூர் மாவட்டத்தில் சோழவரம், வெள்ளவேடு, மீஞ்சூர், வெங்கல், செவ்வாய்ப்பேட்டை ஆகிய காவல் நிலையங்கள், தரம் உயர்ந்த காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

252. திருத்தணி நகர காவல் நிலையத்திற்கு மேலும் 50 காவல்துறைப் பணியாளர்களை நியமனம் செய்து அதன் பணியாளர் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

253. திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணியில் காவல் குடியிருப்புகள் ஏற்படுத்தப்படும்.

254. இரண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் துறைப் பிரிவுகள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு அமைக்கப்படும்.

255. தற்காலிகமான மூன்று சுங்கச்சாவடிகள் நிரந்தரமான சுங்கச்சாவடிகளாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாற்றப்பட்டு அதற்கான அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

256. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவின் பணியாளர் எண்ணிக்கையை உயர்த்த ஒரு சார் ஆய்வாளர் மற்றும் 10 காவல் துறைத் தலைமைக் காவலர்கள் சேர்க்கப்படுவார்கள்.

257. காவல்துறைக் கண்காணிப்பாளர் குடியிருப்பு கிருஷ்ணகிரியில் கட்டப்படும்.

258. கிருஷ்ணகிரியிலுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

259. வாகனங்கள் நிறுத்தும் இடவசதி ஊட்டியில் ஏற்படுத்தப்படும்.

260. ஊட்டியில் போக்குவரத்துக் காவலர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்த்தப்படும்.

261. கூடலூர் மற்றும் கோத்தகிரியில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஏற்படுத்தப்படும்.

262. ஊட்டியில் காவல் துறைப் பணியாளர்களுக்கு தங்கும் அறை கட்டப்படும்.

263. நீலகிரி மாவட்டத்தில் நான்குக்கு மேற்பட்ட நெடுஞ்சாலை ரோந்துப் பணி மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்படும்.

264. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சாலைகள் குறுகலானவைகளாக உள்ளதால் நான்கு பிரிவு அழைத்து செல்லும் வேன்கள் சாதனங்களுடன் தீ மற்றும் இடர்நீக்குப் பணித்துறைக்கு வழங்கப்படும்.

265. கோயம்புத்தூர் மாவட்டத்தில் துணை ஆணையர்களுக்கு இரண்டு குடியிருப்புகள் அமைக்க ஒப்புதலளிக்கப்படும். இரண்டு ஆய்வாளர்கள் குடியிருப்புகள் துணை ஆணையர்கள் குடியிருப்புகளாக சில மாற்றங்களுடன் மாற்றப்படுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

266. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூன்று காவல் நிலையங்களுக்கு கட்டடம் கட்ட அனுமதிக்கப்படும்.

267. கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு இரண்டு கனரக கட்டியிழுத்துச் செல்லும் வண்டிகள் வாங்க அனுமதிக்கப்படும்.

268. கோயம்புத்தூர் நகரத்தில் ஒரு போக்குவரத்துப் புலனாய்வுக் காவல் நிலையம் அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

269. இரண்டு சேமக்காவல் பிரிவு ஈரோடு மாவட்டத்தில் அமைக்கப்படும்.

270. ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

271. திருச்சி நகரத்திற்கு 10 கூடுதல் கண்காணிப்பு வாகனங்கள் அனுமதிக்கப்படும்.

272. திருச்சி நகரத்தில் சேமக்காவல் நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

273. திருச்சியிலிருக்கும் துணை ஆணையருக்கு இரண்டு குடியிருப்புகள் அனுமதிக்கப்படும்.

274. திருச்சி நகர காவல் துறைக்கு இரண்டு குற்றவியல் ஆய்வாளர் பணியிடம் அனுமதிக்கப்படும்.

275. தீ மற்றும் இடர் நீக்கும் பணித்துறையில் இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள் இணை இயக்குநர் பணியிட அளவிற்குத் தரம் உயர்த்தப்படும்.

276. கடலூர் மாவட்டத்தில் சேமக்காவல் படைக்கு நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

277. கடலூரில் காவல்துறை காவலர்களுக்கு மருத்துவமனைக் கட்டடம் கட்டப்படும்.

278. இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுச்சுவருடன் கூடிய நிருவாகக் கட்டடம் சேமக்காவல் படைக்குக் கட்டப்படும்.

279. இராமநாதபுரம் மாவட்டத்தில் (Repeater) அடுத்தடுத்த காவல் நிலையம் திருவாடானை மற்றும் கமுதியில் அமைக்கப்படும்.

280. இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு நெடுஞ்சாலைக் கண்காணிப்பு வாகனங்கள் ஏற்படுத்தப்படும்.

281. காவல்துறைக் கட்டுமான நிறுவனத்தில் கூடுதல் பணியிடங்களாகத் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் உதவிப் பொறியாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்கப்படும்.

282. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கழகத்தின் பணியாளர் பலத்தை உயர்த்த ஒரு காவல்துறைத் தலைவர், ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர், மூன்று காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள், இரண்டு துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் நான்கு ஆய்வாளர்கள் ஆகிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு தோற்றுவிக்கப்படும்.

283. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கழகத்திற்கு ஒரு துணை சட்ட ஆலோசகர் பணியிடம் ஏற்படுத்தப்படும்.

**284.** தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கழகத்திற்கு அச்சுக் கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் 25 கணினிப் பொறிகளும் வாங்க ஒப்புதலளிக்கப்படும்.

**285.** முதுநிலை சட்ட ஆலோசகர் பணியிடங்கள் சிபிசிஐடியில் நிரப்பப்படும்.

**286.** தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட சிறைச்சாலை அமைக்க அனுமதிக்கப்படும்.

**287.** செங்கல்பட்டிலுள்ள துணை சிறைச்சாலை மாவட்ட சிறைச்சாலைத் தரத்திற்குத் தரம் உயர்த்தப்படும்.

**288.** மதுரை மற்றும் கடலூரிலுள்ள மத்திய சிறைச்சாலைகளுக்கு தமிழ்நாடு சிறப்புக்காவல் துறைக் குழுக்கள் அமைக்கப்படும்.

**289.** 7 மத்திய சிறைச்சாலைகளும் மற்றும் துணை சிறைச்சாலைகளும் முழுமையாகப் பராமரிக்க நிதி அனுமதிக்கப்படும்.

**290.** ரூ.3 கோடி செலவில் புழல் வளாகத்தில் முன்னோடி சூரிய சக்தி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

**291.** ரூ.25 இலட்சம் செலவில் பெட்டிகள் மற்றும் பைகளைச் சோதனையிடும் கருவிகள் புழல், வேலூர், கடலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைச் சாலைகளில் அமைக்கப்படும்.

**292.** ரூ.1.8 கோடியில் 918 குடியிருப்புகள் சிறைச்சாலைப் பணியாளர்களுக்காகப் பழுதுபார்க்கப்படும்.

**293.** காணொலிக் காட்சிக் கூட வசதி 60க்கு மேற்பட்ட இடங்களில் அமைக்கப்படும். ஏற்கெனவே 11 இடங்களிலிருக்கும் வசதிகள் பழுதுபார்க்கப்படும். எல்லா சிறைச்சாலைகள் மற்றும் நீதிமன்றங்களிலும் காணொலிக் காட்சிக் கூட வசதி ஏற்படுத்தப்படும்.

**294.** தமிழ்நாடு காவல் அகாடமிக்கு சுழல்நிதி ரூ.30 இலட்சம் ஏற்படுத்தப்படும்.

**295.** பழைய காவல்துறைத் தேர்வுப் பள்ளிகளுக்குப் புதிய காவல்துறைத் தேர்வுப் பள்ளிகளின் பணியாளர்களுக்கு சமமாகப் பணியாளர்கள் அளிக்கப்படும்.

**296.** காவல்துறைத் தேர்வுப் பள்ளிக்கு 8,900 இருக்கைகள் வாங்க அனுமதிக்கப்படும்.

**297.** காவல்துறைத் தேர்வுப் பள்ளிகளில் ரூ.10.14 இலட்சம் பீங்கான் பொருட்கள் வாங்க ஒதுக்கப்படும்.

**298.** ரூ.98 இலட்சங்கள் மாநில பேரிடர் காப்புப் படைக்குத் தேவையான சாதனங்கள் வாங்க ஒப்புதலளிக்கப்படும்.

**299.** காவல்துறைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிக் கோப்பை பெறுபவர்களுக்கு ரூ.10,000 ஒவ்வொரு உறுப்பினருக்கும் அளிக்கப்படும்.

300. ரூ.1.75 கோடியில் உயர்ந்த விளையாட்டுக் கருவிகள் மற்றும் வசதிகள் வாங்கப்படும்.

301. மருதம் வளாகத்திற்கு நீர் வழங்கலுக்காக குழாய்கள் பொருத்தப்படும்.

302. வேலூரில் காவல்துறைக் காவலர்களுக்கு மருத்துவமனைக்குக் கட்டடம் ஏற்படுத்தப்படும்.

303. மருந்துகள் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டறிய 100 அதிவேகக் கண்டுபிடிக்கும் பணிமனை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படும்.

304. காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு உதவி புரிய ஒரு சட்ட ஆலோசகர் பணியிடம் எல்லா மாவட்டத்திலும் ஏற்படுத்தப்படும்.

305. சிறைத்துறைக் கையேட்டில் உள்ள அறிவுரைகள் கைதிகளின் பிரிவுகளைத் தெரிவிக்க சிறைக் கண்காணிப்பாளருக்குக் காவல்துறை நிலையாணைகளில் சேர்க்கப்படும்.

306. காவலர்கள் குறிப்பிட்ட கைதிகளின் புகைப்படங்களைத் தேவைப்படும் சிறைக் கண்காணிப்பாளருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

307. காவல்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறைத் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டுக் கூட்டங்கள் நடத்துவது கட்டாயமாக்கப்படும்.

308. ஒரு கூடுதல் மாவட்ட வருவாய் அதிகாரிப் பணியிடம் ஆறு மாதத்திற்கு அனுமதிக்கப்படும். அவர்கள் சிறப்பு நீதிமன்றங்களில் அரசாணையின்படி O.A மனு தாக்கல் செய்ய பயன்படுத்தப்படுவார்கள்.

309. தலைமையிடத்திலுள்ள பொருளாதாரக் குற்றங்களுக்கான பிரிவுக்கு ஒரு சட்ட ஆலோசகர் பதவியிடம் அனுமதிக்கப்படும்.

310. இரயில்வே பாதுகாப்புப் படை கட்டுப்பாட்டு அறையை நிறுவுவதற்காக ரூ. 2 இலட்சம் அனுமதிக்கப்படும். தொடரினச் செலவாக ரூ. 24,000/– அனுமதிக்கப்படும்.

311. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒரு முறை அளிக்கப்படும் மானியமான 50 இலட்சம் ரூபாய் 1 கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும்.

312. பள்ளிப் பாடத்திட்டத்தில் கணினி இணையப் பாதுகாப்பு நடைமுறைகள் சேர்க்கப்படும்.

313. மதுவிலக்கு ஆயப் பிரிவுக்கு, 14 கூடுதல் சோதனைச் சாவடிகள் அனுமதிக்கப்படும். இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு சார் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், நான்கு காவலர்கள் வீதம் அனுமதிக்கப்படும்.

**314.** தற்போதுள்ள 29 சோதனைச் சாவடிகளுக்கு முன்னரே தயாரிக்கப்பட்ட அமைப்புகள் வழங்கப்படும். அவற்றுக்கு, படிப்படியாக நிரந்தரமான கட்டடங்கள் வகை செய்யப்படும்.

**315.** மதுவிலக்கு தொடர்புடைய ‘தொலைபேசி உதவி இணைப்பு’ ஒன்று அனுமதிக்கப்படும்.

**316.** காவல்துறையின் கட்டடப் பராமரிப்புக்காக ஒவ்வோராண்டும் ரூ. 25 கோடி அனுமதிக்கப்படும்.

**317.** புலனாய்விற்கான செலவுகள், ரூ. 1.5 கோடியாக அதிகரிக்கப்படும்.

**318.** இந்த ஆண்டில் வண்டிகளின் வாடகை வகையில் கூடுதலாக ரூ. 75 இலட்சம் வழங்கப்படும்.

**319.** செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதில் அனைத்துக் காவல்துறைப் பணியாளர்களும் ‘ஒரே குழும எண்ணிக்கை’ (Closed user group) படிவ முறையின் கீழ் கொண்டு வரப்படுவர்.

**320.** காவல்துறையின் பயன்பாட்டுக்காக, அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து ரூ. 95 இலட்சம் செலவில் மூன்று பணியாளர்களற்ற கம்பியில்லாத் தந்தி வண்டிகள் வாங்கப்படும்.

**321.** காவல்துறைக்குப் போதுமான மீ உயரலை சாதனங்களுக்கு வகை செய்யப்படும்.

**322.** ரிபீடர் நிலையங்கள் அமைந்திருக்கின்ற வனத்துறைக்கான குத்தகையானது குறைந்தளவிற்குக் குறைக்கப்படும்.

**323.** சத்தியமங்கலத்தில் அதிரடிப்படை வளாகங்களுக்கு ரூ. 9 கோடி செலவில் கட்டடத்திற்கு வகை செய்யப்படும்.

**324.** அதிரடிப்படைப் பணியாளர்களுக்கான இடர் ஏற்புப் படியானது, 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

**325.** பொது விநியோகத் திட்ட பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துவதில் ஈடுபடுகின்ற வண்டிகளைப் பறிமுதல் செய்வது குறித்த சட்டரீதியான நிலையை விளக்குவதற்கு, உணவுச் செயலாளர், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் எழுதுவார்.

**326.** குற்றப்புலனாய்வுத் துறையின் உணவுப் பிரிவுக்குக் கூடுதல் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்படும். அப்போதுதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரிவு செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

**327.** தடுப்புக்காவலுக்கான ஆவணப் பணித் தொகையானது 3,000 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

**328.** உணவுப் பிரிவிலுள்ள காவல்துறைப் பணியாளருக்கு மிகைப்பணி ஊதியம் வழங்கப்படும்.

**329.** மருதம் வளாகத்திலுள்ள பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகத்தில் ரூ.81.8 இலட்சம் செலவில் தற்போதுள்ள தரைத்தளத்திற்கு மேல் கூடுதல் தளம் ஒன்று கட்டப்படும்.

**330.** வெடிமருந்து வழக்குகளைக் கையாளுவதற்காக ரூ.42 இலட்சம் செலவில், தற்போதுள்ள எண்ணிக்கையுடன், பத்து வெடிமருந்து கண்டறியும் மோப்ப நாய்கள் சேர்க்கப்படும்.

**331.** சென்னை மாநகர குதிரைப் படைப்பிரிவுக்கு 16 குதிரைகள் வாங்கப்படும்.

**332.** சென்னை மத்திய குற்றப் பிரிவுக்கு சட்ட ஆலோசகர் பதவி ஒன்று அனுமதிக்கப்படும்.

**333.** சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கு மேலும் நான்கு சிறப்பு அரசு வழக்கு நடத்துனர் பதவியிடங்கள் அனுமதிக்கப்படும்.

**334.** 11 மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பு அலுவலகங்களின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கு அறைக்கலன், கணினி மற்றும் நிகரி சாதனங்கள் வழங்கப்படும்.

**335.** வீட்டுவசதி வாரிய அடுக்குமாடி வீடுகள் சென்னை மாவட்ட, மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் அதிகாரியின் குடியிருப்புகளாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**336.** ‘இனோவா’ வண்டிகள், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர், துணை ஆணையர்கள், சரக காவல்துறைத் துணைத்தலைவர்கள், துணை ஆணையாளர்கள், காவல்துறை கூடுதல் ஆணையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும்.

**337.** மாவட்டங்களிலுள்ள கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் (குற்றம்) சிறப்புப் பிரிவுகளிலுள்ள கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளராக (தலைமையிடங்கள்) நியமிக்கப்படுவர். பதவி நியமனம், பதவி உயர்வு, தண்டனை மற்றும் விருதுகள் ஆகியவை நீங்கலாக அனைத்து நிருவாக அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்படும். மேற்சொன்னவற்றை காவல்துறைக் கண்காணிப்பாளர்களே தொடர்ந்து கவனிப்பர்.

**338.** தற்போது காவல்துறை தலைமை இயக்குநரிடம் நிலைபெற்றுள்ள நிருவாக அதிகாரங்கள், கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர்களுக்கும், காவல்துறைத் தலைவர்களுக்கும் உரியவாறு மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

**339.** தற்போதுள்ள வட்டங்களை இரண்டாகப் பிரிக்குமாறு பல மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். சட்டமன்றப் பேரவையில் நான் செய்த அறிவிப்பின்படி, வட்டங்களை இரண்டாகப் பிரிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிடமிருந்து பரிந்துரைகள் வரப்பெற்றவுடன், வட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்.

**340.** அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் பயில்கின்ற மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிறப்பு உதவித் தொகைகளை வரவு வைப்பதற்காக ஜீரோ இருப்பு உள்ள வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

**341.** மாவட்ட ஆட்சியர்கள், ஜீரோ இருப்பு உள்ள வங்கிக் கணக்குத் தொடங்கப்படுவதையும், படிப்பு உதவித் தொகை மாணவர்களின் இந்தக் கணக்கில் வரவு வைக்கப்படுவதையும் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்.

342. பள்ளி மாணவர்களுக்கு, பள்ளிப் பைகளும், கல்வி உபகரணங்களும் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து வழங்கப்படும். வழங்கப்படுகிற பொருளின் தரத்தையும் அவை 2013 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்கு முன்னர் உரிய காலத்தில் முறையாக வழங்கப்படுவதையும் மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

343. பொதுமக்களுக்கு உதவுவதற்காக நிகழ்ச்சி நிரலிலுள்ள திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டங்களை சிறந்த முறையில் கண்காணிப்பதற்காக முதுநிலை அதிகாரிகள் மாதம் ஒரு முறையாவது நேரடியாகப் பார்வையிடுவது பயனளிக்கும். இதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மாதாந்திரக் கண்காணிப்பு முறை பெரும்பாலும் நிறுத்தப்பட்டுள்ளது. இது மீண்டும் தொடங்கப்படும். சென்னையைச் சேர்ந்த முதுநிலை அதிகாரி ஒருவரும், மாவட்ட ஆட்சியரும் தலைமை வகிக்கின்ற இந்த மாதாந்திரக் கூட்டத்தில் அனைத்து துறைத் தலைவர்களும் பதிலளிக்க கடமைப்பட்டவர்கள் என்பதால் இது மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்தை மீண்டும் உறுதி செய்வதற்கும் இது உதவும்.

மொத்த உணவுதானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்குக் குறைவாக உற்பத்தி செய்த மாநிலங்களின் வரிசையில், சிறப்பாகச் செயலாற்றிய மாநிலத்திற்கான 2011–12 ஆம் ஆண்டிற்கான கிருஷி கர்மன் விருதுக்காக மத்திய அரசால் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் நான் தற்போது மகிழ்ச்சியடைகிறேன்.

*****

“ஜனநாயகத்தில், மக்கள்தான் எஜமானர்கள் என்பதையும், சாதாரண மக்கள் கண்ணியம் நிறைந்த, தேவைகள் நிறைவேறிய, முழு வாய்ப்பு மற்றும் நம்பிக்கை கொண்ட வாழ்வினை வழிநடத்திச் செல்வதற்கு நாங்கள் அனைவரும் இங்கிருக்கிறோம். இதனை அடைவதற்கு, இங்கு விவாதிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் திட்டங்களாக உருப்பெற்றுள்ளன. இந்த மாநாட்டில் இந்த அணுகுமுறையானது, சாதனையை முறியடிக்கும் வகையில் அமைந்துள்ளது.”

**– செல்வி ஜெ ஜெயலலிதா**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்